श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

श्रीसारबोधिनी-संप्रदाय-प्रकाशिका

இந்த க்ரந்தம்

ஸ்ரீமதழகியசிங்கரின்

பிரதான சிஷ்யர்களால்

எழுதி வெளியிடப் பெற்றது

துர்மதி வருஷம் புரட்டாசி சிரவணம்

8—10—1981

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

श्रीमते श्रीलक्ष्मीनृसिंहदिव्यपादुकासेवक श्रीवण्शठकोप

श्रीश्रीरङ्गशठकोपयतीन्द्रमहादेशिकाय नमः

श्रीमद्भ्यः श्रीवण्शठकोप श्रीवीरराघवशठकोप,

श्रीवेदान्त देशिकयतीन्द्रमहादेशिकेभ्यो नमः

ஸ்ரீஸாரபோதிநீ ஸம்ப்ரதாய ப்ரகாசிகா

श्रीसारबोधिनी-सम्प्रदाय-प्रकाशिका

सन्तः श्रीरङ्गयोगीशचरणत्राणशेखराः ।
जयन्ति भुवनत्राणपदपङ्कजरेणवः ॥

ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் தத்த்வத்ரய சிந்தநாதிகாரத்தில் “धर्मभूतज्ञानத்திற்கு விஷயித்வமாவது தன்னை ஒழிந்தவொன்றைக் காட்டுகை” என்று அருளிச்செய்துள்ளார்.

இதற்கு வ்யாக்யானமாக ஸ்ரீ ஸாக்ஷாத் ஸ்வாமி செய்தருளிய ஸ்ரீ ஸாராஸ்வாதிநீ ஸ்ரீஸூக்திகளாவன. தர்மியானது தன்னை ப்ரகாசிப்பித்தாலும் தன்னையொழிந்தவொன்றை ப்ரகாசிப்பியாமையாலே இதற்கு விஷயித்வமில்லை என்று கருத்து. தர்மியானது அஃ

என்று ப்ரத்யக்த்வாதி விசிஷ்டமாக ப்ரகாசிக்கையாலே ஸ்வவ்யதிரிக்தங்களான ப்ரத்யக்த்வாதிகளையும் ப்ரகாசிப்பிக்கவில்லையோ? என்ன, இவைகளும் ஸ்வயம் ப்ரகாசங்களாகையாலே இது அவைகளை ப்ரகாசிப்பிக்கிறதில்லை. அது எங்ஙனே என்னில் घटमहं जानामि என்று தர்மிஸ்வரூபம் ப்ரகாசிக்கிறபோது அந்த தர்மிஸ்வரூபஜ்ஞாநத்திற்கு கர்மாவாகவன்றிக்கே ப்ரகாசிக்கையாலே இவைகளும் ஸ்வயம் ப்ரகாசங்கள் என்று கொள்ளவேணுமிறே'' என்று.

இஞ்சிமேட்டு ஸ்ரீமதழகியசிங்கர் வ்யாக்யானம் செய்தருளும்போது ஸ்ரீ ஸாரபோதினியில், ''தர்மபூதஜ்ஞாநத்திற்குச் சொன்ன விஷயித்வத்தை விசதீகரிக்கிருர் தன்னையொழிந்த தொன்றைக் காட்டுகை இதி. தன்னை யொழிந்தது-தன்னை விட்டது.

स्वपृथक्सिद्धं, स्वापृथक्सिद्धभिन्नं इत्यर्थः

இதனுல் தர்மிஜ்ஞாநம் स्वापृथक्सिद्धமான ப்ரத்யக்த்வ, ஏகத்வாதிகளைக் காட்டினுலும் स्वपृथक्सिद्ध வஸ்துவைக் காட்டாதாகையால் அதில் அதிவ்யாப்தி இல்லை என்று ஜ்ஞாபிக்கப்படுகிறது. தன்னையொழிந்தது என்பதற்கு, தன்னை விட்டது என்று அர்த்தமேயொழிய स्वभिन्न என்று அர்த்தமன்று. 'ஒழிந்தது' என்பதற்கு பேதமை தீர்ந்து ஒழிந்தேன். [பேதமை—க்லேசப்படுகையை, தீர்ந்தொழிந்தேன்-நிவர்த்திப்பித்தேன்] இத்யாதிகளில் விடுதலே அர்த்தமாக அங்கீகரிக்கப்பட்டதிறே. தத்விருத்தமாக பின்னூர்த்தும் சொல்லுவது ப்ராமாணிகமாகாது. லோகத்திலும் ''க்லேசத்தை ஒழிந்த ஒருவன்'' என்றுல் அதற்கு ''க்லேசவ்யதிரிக்தனை ஒருவன்'' என்று அர்த்தம் சொல்லுவாருமுண்டோ? ஆகையால் தன்னையொழிந்தது என்றுல் தன்னை விட்டதொன்று स्वपृथग्भूतम्—स्वापृथग्भूतभिन्नं என்று அர்த்தம் கொள்வதே

இங்கு ப்ராமாணிகமாகையால் ப்ரத்யக்த்வாதி ஸ்வாப்ருதக்பூத தர்மங்களைக் காட்டும் தர்மியில் அதி வ்யாப்தி இல்லை என்று.

இவ்விரண்டு வ்யாக்யானங்களிலும் சொல்லப் பட்ட அர்த்தங்களின் ஸாராம்சம்.

ஸ்ரீஸாராஸ்வாதிநீகாரர் தன்னையொழிந்த தொன்றை ப்ரகாசிப்பிக்கை—ஸ்வபிந்நமான தொன்றை ப்ரகாசிப்பிக்கை என்று அர்த்தம் பண்ணுகிறார். அப்பொழுது தர்மியானது ஸ்வபிந்நமான ப்ரத்யக்த்வாதிகளை க்ரஹிப்பதால் அதிவ்யாப்தி வருமே என்றால் ப்ரத்யக்த்வாதிகளும் ஸ்வயம்ப்ரகாசங்களாகையால் தர்மி ஜ்ஞாநத்தில் விஷயங்களாகவில்லை. ஆகையால் அதி வ்யாப்தி இல்லை என்கிறார்.

ஸ்ரீ ஸாரபோதிநீகாரர், 'அஹம்' என்று ஆத்மா தோன்றும்போது தான் தன்னுடைய ஸ்வரூபநிரூபக தர்மங்களான ப்ரத்யக்த்வ, அநுகூலத்வாதி விசிஷ்டமாகவே தோன்றும். இவை ஆத்மாவை விட்டுப் பிரியாதவை. स्वापृथक्सिद्धங்கள். ஆகையால் ப்ரத்யக்த்வாதிகளை தர்மியானது விஷயீகரித்தாலும் தன்னை விட்டதொன்றை விஷயீகரிக்கவில்லையாகையால் தர்மபூதஜ்ஞாநத்திற்குச் சொன்ன விஷயித்வம் தர்மியிலும் இருப்பதால் அதிவ்யாப்தம் என்று சொல்லுவதற்கில்லை என்று அருளிச்செய்துள்ளார். மேலும், ஸாராஸ்வாதிநியில் கூறப்பட்டுள்ளபடி அநுகூலத்வ ப்ரத்யக்த்வாதிகளுக்கு ஸ்வயம் ப்ரகாசத்வம் ஒப்புக் கொண்டால் உபநிஷத்பாஷ்யகாரர் ஸ்ரீஸூக்தி, விரோத பரிஹார ஸ்ரீஸூக்தி, ஸ்ரீந்யாயஸித்தாஞ்ஜன ஸ்ரீஸூக்தி, ச்ருதப்ரகாசிகா, தத்வடீகா, பாவப்ரகாசிகா முதலான ஸ்ரீஸூக்திகளுக்கு விரோதம் வரும் என்றும் அருளிச்செய்துள்ளார்.

ஸ்ரீஸாரபோதிநீ வ்யாக்யானத்துடன் கூடிய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார க்ரந்தம் 1954ஆம் வருஷம் ஜனவரி மாதம் அதாவது இருபத்தேழு வருஷங்களுக்கு முன்பே அச்சாகி வெளிவந்திருக்கிறது. இருபத்தேழு வருஷங்கள் கழித்து இப்பொழுது இரண்டொரு மாதங்களுக்கு முன் ஸ்ரீஸாரபோதிநீ நிர்வாஹத்தைக் கண்டிக்கும் ரீதியில் "ஸ்ரீஸாராஸ்வாதிநீ ரக்ஷா" என்கிற க்ரந்தத்தை மஹாவித்வான் ஸ்ரீ. உ.ப. மதுராந்தகம் ஸ்வாமி அருளிச் செய்துள்ளார்.

ஸ்ரீஸாராஸ்வாதிநியின் நிர்வாஹம் அநேக க்ரந்தங்களுக்கு ஒத்திருக்கிறது என்று நிருபித்துள்ளார். ஸ்ரீஸ்வாமி தமக்கிசைந்த பக்ஷத்தை நிர்வஹிப்பதற்காக ரக்ஷாக்ரந்தத்தை அருளிச்செய்துள்ளதைப்பற்றி யாரும் குறைகூற முடியாது; குறைகூறவும் கூடாது. அவரவர்கள் ஆசார்யர்கள் அருளிச் செய்த க்ரந்தத்தை ஸம்ரக்ஷிப்பது மஹான்களின் கடமையேயாகும். தமக்கு அபிமதமான நிர்வாஹத்தை ரக்ஷித்து எழுதும்போது மற்ற நிர்வாஹத்தை கண்டித்து அல்லது குறைகூறி அல்லது ஈாஸமக்காக, தப்பு என்றும் சொல்லியிருப்பதால் அதற்குப் பதில் எழுத வேண்டியது ஸ்ரீமதழகியசிங்கரின் சிஷ்யர்களான எங்கள் கடமையாகும். ஸ்ரீ ஸ்வாமிக்கு ஸத்ருசமான பாண்டித்யாதிகள் அடியேர்ங்களுக்கு இல்லாவிட்டாலும், 'युक्तियुक्तं वचो ग्राह्यं बालादपि शुकादपि' என்கிறபடி ஆசார்யர்கள் அருளிச்செய்த யுக்திகளைக் கொண்டு இங்கு பதில் எழுதுவதை ஸ்ரீஸ்வாமியும் மற்ற மஹான்களும் கடாக்ஷித்துத் திருவுள்ளத்தில் கொள்ள வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

இனி, ரக்ஷா க்ரந்தத்தில் கூறப்பட்டுள்ளவற்றை அநுவதித்து, பதில் கூறுகிறோம்.

1. ஸ்ரீஸ்வாமி, "இதிலுள்ள தோஷங்களை நிர்மத்ஸரா: நிபுணயிய: நிரீக்ஷந்து" என்று ஸாரபோதினியில்

உள்ளதை அபசப்தம் என்கிறார். 'நிரீக்ஷந்தாம்' என்று இருக்க வேணும் என்று ஸாதித்து ஒரு ச்லோக மிட்டுள்ளார்.

''निर्मत्सरा निरीक्षन्तां श्रीसारास्वादिनीगुणात्''

என்று. இந்த ச்லோகத்தில் எதைப் பார்க்கும்படி சொல்லுகிறார் कर्म किम्? 'குணாத்' என்கிற பஞ்சமி எங்கு அந்வயிக்கிறது? பூர்வார்த்தத்தில் कर्म किम्? என்று கேட்ட கேள்வியை ஸ்வாமியை நாங்களும் திருப்பிக் கேட்கிறோம்.

'குணாந்' என்றிருக்க வேண்டும்; 'குணாத்' என்பது அச்சுப் பிழை என்னலாம். அதே போல் க்ரந்தாக்ஷரத்தில் 'ந்தாம்' 'ந்து' என்பதற்கும் ஸூக்ஷ்மமான வித்யாஸமே உள்ளது. சோதனம் செய்தவர்களுடைய அநவதானத்தால் நேர்ந்த தவறாகும். இதைப் பெரிதுபடுத்த வேண்டியதில்லை. இதைப் பெரிதுபடுத்தி ச்லோகம் எழுதியதனால் இதில் அதே போன்ற குறை ஏற்பட்டு உள்ளது. 'ப்ரதமகபளே மக்ஷிகாபாத:.' ஸ்ரீஸ்வாமி தாமே எழுதித் தாமே சோதித்த க்ரந்தம் போன்றதில்லை ஸ்ரீஸாரபோதிநீ. ஸ்ரீமதழகியசிங்கர் ஸாதிக்க, சிஷ்யர்கள் பட்டோலை சாத்தினார்கள். பிறகு அச்சிடும்போது சிஷ்யர்கள் சோதித்தார்கள். அதை வாசித்தும் கேட்கவில்லை. ஆகையால் மற்றவர்களின் அநவதாநக்ருத்யத்தைக் குறை கூறுவது பெருமையாகாது.

''விகல்பேந பரஸ்மைபத ப்ரயோகமும் உண்டு'' என்று சப்தசாஸ்த்ராபிஜ்ஞர்கள் கூறுவதையும் நினைவுபடுத்துகிறோம்.

இதற்கு அடுத்தபடியாக, ஸ்ரீஸ்வாமி ந்யாயகுலிசத்திலுள்ள ஸ்ரீஸூக்திகளை ப்ரமாணமாகக்காட்டி அநுகூலத்வாதிகளுக்கு ஸ்வயம்ப்ரகாசத்வத்தை ஸ்தாபித்துள்ளார்.

இதற்குப் பதில் எழுதுவதற்கு முன்னதாகச் சில விஷயங்களை எழுதவேண்டியிருப்பதனால் அவற்றை

முதலில் எழுதுகிறோம். இதை அவதாரிகையாகவும் கொள்ளலாம்.

ஸ்ரீஸ்வாமி தேசிகன் ந்யாயஸித்தாஞ்ஜனத்தில்

'अहमिति, प्रत्यक्त्व, एकत्वादिविशिष्टतया तु स्वयं-प्रकाशता सर्वदा"

என்று ஜீவபரிச்சேதத்தில் அருளிச்செய்துள்ளார். இதற்கு வ்யாக்யானம் செய்தருளிய உபநிஷத்பாஷ்ய-காரர்

प्रत्यक्त्व, एकत्वादिकं स्वरूपातिरिक्तधर्मान्तरमेव । न च तद्विषयकत्वे विषयित्वप्रसङ्गः इति वाच्यम् । स्वापृथक्सिद्ध-धर्मव्यतिरिक्तविषयकत्वं नास्तीत्यत्र तात्पर्याद्विषयित्वाभाव-प्रवादस्य । वक्ष्यति च आत्मस्वरूपज्ञानस्य प्रमाणत्वम् । अतो न काचिदनुपपत्तिः' इति ॥

ப்ரத்யக்த்வாதிகள் ஆத்மாவினுடைய தர்மங்கள், அவற்றை தர்மிபாஸ்யமாகச் சொல்லவொண்ணுது. இவ்விதம் சொன்னுல் — ப்ரத்யக்த்வாதிகள் தர்மியில் விஷயமாவதால் தர்மிக்கும் விஷயித்வம் வந்துவிடும். தர்மபூதஜ்ஞாநத்திற்குச் சொன்ன லக்ஷணம் தர்மியிலும் இருப்பதால் அதிவ்யாப்தி என்று சொல்ல வேண்டாம். தன்னை விட்டதொன்றை க்ரஹிக்காத தால் தோஷமில்லை. தர்மபூதஜ்ஞாநம் தன்னை விட்ட தொன்றையே க்ரஹிப்பதால். இங்கு ஒரு ஸந்தேஹம் உண்டாகிறது. அதாவது—"தர்மபூதஜ்ஞாநம் தானே ப்ரமாணமாகும். தர்மிஜ்ஞாநம் ப்ரமாணமாகுமோ? அது ப்ரமாணமாகுலன்றோ ப்ரத்யக்த்வாதிகளை விஷயீகரிக்க முடியும்?' என்று. ஆத்மஸ்வரூப—தர்மி ஜ்ஞாநமும் ப்ர மாணமாகும் என்பதை மேலே சொல்லப்போகிருர்.

ஆகையால் ஒரு தோஷமும் இல்லை என்பது வ்யாக்யா னத்தின் திரண்ட பொருள். ஆக இதனால், உபநிஷத் பாஷ்யகாரர் அநுகூலதவாதிகள் தர்மிபாஸ்யங்கள் என்று அருளிச் செய்தாராயிற்று.

உபநிஷத்பாஷ்யகாரருக்குப் பிற்பட்டவரான ஸாராஸ்வாதிநீகாரர் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில், "ப்ரத்யக்த்வாதிகள் ஸ்வயம் ப்ரகாசங்கள்" என்று அருளிச்செய்துள்ளார். அதாவது - घटमहं जानामि என்று தர்மபூதஜ்ஞாநம் ப்ரகாசிக்கிறபோது கர்மமாக ப்ரகாசிக் கிற கடாதிகள் போலன்றிக்கே ப்ராகாசிக்கிற ஜ்ஞாநத் வம் ஸ்வயம்ப்ரகாசமானாற்போலே அஹம் என்று தர்மி ஸ்வரூபம் ப்ரகாசிக்கிறபோது அந்த தர்மிரூபஜ்ஞாநத் துக்குக் கர்மமாகவன்றிக்கே ப்ரகாசிக்கையாலே இவை யும் ஸ்வயம்ப்ரகாசங்கள் என்று கொள்ள வேண்டும்" என்று.

ஸாராஸ்வாதிநீ என்கிற வ்யாக்யானத்தை அருளிச் செய்தவருக்குப் பிற்பட்டவரான, ஸ்ரீந்யாயஸித்தாஞ் ஜனத்திற்கு ரத்ந பேடிகை என்னும் வ்யாக்யானத்தை அருளிச்செய்த ஸ்வாமி மேலே கூறிய ந்யாயஸித்தாஞ் ஜன ஸ்ரீஸூக்திக்கு வ்யாக்யானம் செய்தருளும்போது

अत्र प्रत्यक्त्वादयः स्वयंप्रकाशा एवेति केचिदाचार्याः अपरे पुनः धर्मिभास्या एवेति

"சில ஆசார்யர்கள் ப்ரத்யக்த்வாதிகள் ஸ்வயம்பரகாசங் கள் என்றார்கள். வேறு சிலர் தர்மிபாஸ்யம் என்கிறார் கள்" என்று ஸாராஸ்வாதிநீகாரர், உபநிஷத் பாஷ்ய காரர் இருவருடைய பக்ஷங்களையும் ஒப்புக்கொண்டு வ்யாக்யானம் செய்தருளினார். முதலில் தர்மிபாஸ்பத்வ பக்ஷத்தில் உபநிஷத் பாஷ்யகாரர் செய்தருளிய வ்யாக்யானப்படியே தோஷங்களையும் அதன் பரிஹாரங் களையும் - அருளிச்செய்துள்ளார். ஸ்வயம்ப்ரகாசத்வ

பக்ஷத்தை ஸ்தாபிக்கும்போது ஸ்ரீந்யாயஸித்தாஞ்ஜன ஸ்ரீஸூக்திக்குச்சாப்தபோதம் சொல்லி தர்க்கரீதியாகப் பரிஷ்கரித்து ஸ்தாபித்தருளினார்.

இந்த ஸ்வாமிக்குப் பிற்பட்டவரான ஸ்ரீ ஸாரபோதிநீ என்கிற வ்யாக்யானத்தை அருளிச்செய்தவர். உபநிஷத்பாஷ்யகாரர் அருளிச்செய்தபடியே ப்ரத்யக்த்வாதிகளுக்கு தர்மிபாஸ்யத்வத்தைத் தமது வ்யாக்யானத்தில் அருளிச்செய்தார். ஸ்வயம்ப்ரகாசத்வத்தை ஒப்புக்கொண்டால் பல க்ரந்தங்களுக்கு விரோதம் வரும் என்றும், தர்க்க பரிஷ்காரம் ஸரியில்லை என்றும் அருளிச்செய்தார்.

ஸ்ரீஸாரபோதிநீ வ்யாக்யாதாவிற்குப் பிற்பட்டவரான 'ஸாரவிஸ்தரம்' என்றவ்யாக்யானத்தை அருளிச்செய்தருளியவர், ரத்நபேடிகா காரரைப் போல் இரண்டு பக்ஷங்களையும் ஒப்புக்கொண்டுள்ளார். ஸ்வயம்ப்ரகாசத்வ பக்ஷத்தைப் பல யுக்திகளைக் கொண்டும், தர்க்க பரிஷ்காரங்களைப் பண்ணியும் ஸ்தாபித்தருளியுள்ளார்.

கேவல யுக்திகளாலும் பரிஷ்காரங்களாலும் ஸ்வயம் ப்ரகாசத்வத்தை ஸ்தாபிப்பதை ஸ்ரீஸாராஸ்வாதிநீ ரக்ஷா க்ரந்தத்தை அருளிச்செய்த ஸ்வாமி அவ்வளவாகத் திருவுள்ளம் பற்றவில்லை போலும். "தர்க்காப்ரதிஷ்டாநாத்" என்றார் ஸூத்ரகாரர். ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் தத்வத்ரய சிந்தநாதிகாரத்தின் முடிவில்,

'कृशानर्थांस्ततः केचित् अकृशान् तत्र कुर्वते'

என்கிற படியே,' தர்க்கபாண்டித்யத்தாலே நினைத்தது எல்லாம் ஸாதிக்கலாயிருக்கச் செய்தேயிறே நாம் ப்ரமாணசரணராய்ப் போருகிறது' என்றன்றோ அருளிச்செய்துள்ளார்? ஆகையால் ப்ரமாணங்களைக் காட்டியே அநுகூலத்வாதிகளுக்கு ஸ்வயம் ப்ரகாசத்வத்தை ஸாதிக்க வேண்டும் என்று திருவுள்ளத்தைப் பற்றியே

ரக்ஷா க்ரந்தத்தை அருளிச்செய்துள்ளார் போலும். ஆக இந்த விஷயத்தில் மூன்று வழிகள் பின்பற்றப்பட்டுள்ளன—

1. உபநிஷத்பாஷ்யகாரரும், ஸாரபோதிநீகாரரும் ப்ரத்யக்த்வாதிகள் ஸ்வயம்ப்ரகாசங்கள் அல்ல தர்மிபாஸ்யங்கள் என்றுர்கள்.

2. ரத்நபேடிகாகாரரும், ஸாரவிஸ்தரகாரரும் இரண்டு பக்ஷத்தையும் ஒப்புக்கொண்டிருக்கிறுர்கள்.

3. ஸ்வயம் ப்ரகாசத்வத்தை மட்டும் ஒப்புக்கொண்டு, தர்மிபாஸ்யத்வத்தை ஒப்புக்கொள்ளாதவர்கள் ஸ்ரீ ஸாராஸ்வாதிநீகாரரும் ரக்ஷாக்ரந்தகாரரும்.

ஸ்வயம்ப்ரகாசத்வத்தை அருளிச்செய்த ஸ்ரீ ஸாராஸ்வாதிநீகாரரும் ஸ்வயம்ப்ரகாசத்வத்தை ஸ்தாபிக்க வந்த மற்ற ஸ்வாமிகளும் யுக்திகளாலும் பரிஷ்காரங்களாலும் ஸ்தாபித்தருளிஞர்களேயன்றி, அநந்யதாஸித்த பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீ ஸூக்திகளை ப்ரமாணமாகக் காட்டவில்லை. ஏன்? ந்யாயகுலிச க்ரந்தத்தை அவர்கள் ஸேவிக்கவில்லை என்று சொல்லப்போமோ? ஸர்வ க்ரந்தங்களையும் ஸம்யக் பரிசீலனம் பண்ணியே இருக்கிறுர்கள். அவ்விதம் இருக்க, அவர்கள் இதம்பரமாக வ்யாக்யானம் பண்ணியருளின இடங்களிலும் ந்யாயகுலிசாதிகளை ப்ரமாணமாகக் காட்டவில்லையே; ஏன்? ஸ்வயம் ப்ரகாசத்வத்தை இசையாதவர்களும் ந்யாயகுலிச க்ரந்தத்தை ஸேவித்திருக்க மாட்டார்கள் என்று சொல்லப் போகாது. ஆகையால், ரக்ஷாக்ரந்தகாரர் காட்டிய ந்யாயகுலிச ஸ்ரீஸூக்திகள் ஸ்வயம்ப்ரகாசத்வ விஷயத்தில் ப்ரமாணங்கள் ஆக மாட்டா என்பதே எல்லா [ஸ்வாமிகளுடையவும் திருவுள்ளம்

என்று தேறுகிறது. ஸ்வயம் ப்ரகாசத்வ பக்ஷத்திற்கு ப்ரமாணம் இல்லை என்பதற்கு, மேலே கூறிய ஸ்வாமிகளே முக்ய ப்ரமாணபூதர்கள். 'அவர்கள் ஏன் ந்யாயகுலிச ஸ்ரீ ஸூக்திகளை ப்ரமாணங்களாகக் காட்ட வில்லை' என்பதற்குக் காரணத்தை அந்த ஸ்ரீ ஸூக்தி யையும் அதன் அர்த்தத்தையும் விவரித்துக் கூறுவதன் மூலம் காட்டுகிறோம்.

ஸ்ரீ ஸ்வாமி ப்ரமாணமாகக் காட்டியருளிய ஸ்ரீ ந்யாயகுலிச ஸ்ரீ ஸூக்தியுள்ள ப்ரகரணத்தைப் பூர்ண மாக எழுதுகிறோம். **निर्मत्सराः निपुणधियः निरीक्षन्ताम् ।**

ननु-अयमात्मा चेत् स्वप्रकाशः, स्वाभाविकसुखरूपादि-भावात् संसाराभावप्रसङ्गः । तस्य तिरोधानात् तदुपपत्तिरिति चेत्, स्वप्रकाशस्य कथं तिरोधानम्? तथात्वे वा किमपराद्धं परैः? येन तिरोधाने स्वरूपनाशस्तेषा मापाद्यते इति चेत्-अयमत्र विशेषः—निर्विशेषः प्रकाशः परेषाम्, सविशेषोऽस्माकम् । विशेषश्च आनुकूल्यं प्रकाशस्वरूपाद्भिन्नम् । यतस्सुखदुःखयो-रनुगतप्रकाशो दृश्यते । सुखमेवानुकूलम् । तत्रानुकूल्ये तारतम्य-विशेषः अस्ति, मसृणं तीव्रं चेति । तत्र मसृणं सर्वदा प्रकाशते; येन रूपेण देही देहादिभ्योऽतिविलक्षणः सुषुप्तिविषयोऽपि स्वप्रकाशवृत्त्या साक्षादेवानुभूयते—इत्युक्तम् । शास्त्रेण तु निखिलसांसारिकदुःखतिरोधानक्षमः प्रत्यगात्मगतानुकूल्यविशेषः स्फुट एवोपदिश्यते । आत्मविषयक विशदज्ञानेन कर्मणः क्षये [स्वयमेव प्रकाशते । यद्वा तदानीं] धर्मभूतज्ञानविषयभावापेक्षं प्रकाशते ॥

இதன் ஸாராம்சம்- [பதின்மூன்றும் வாதத்தில் ஸ்வயம் ப்ரகாசமான ஆத்மாவிற்கும் ஸம்ஸாரத்தின் உபபத்தியையும் கைவல்யத்தின் ஸ்வரூபத்தையும் நிரூபணம் பண்ணுகிறார்.] நநு-ஆத்மா ஸ்வயம்ப்ரகாசமானால் எப்பொழுதும் ஸுகரூபமாகவே தோன்றுமாகையால் ஸம்ஸாரமே இல்லாமற் போகும். அதற்குத் திரோதானம்—மறைவு ஏற்படுவதனால் ஸம்ஸாரம் உண்டாகிறது என்று பதில் கூறுவது ஸரியாகாது. ஸ்வப்ரகாசத்திற்குத் திரோதானம் என்பது ஸ்வரூபநாசமேயாகும். ஸ்வயம்ப்ரகாசமான ப்ரஹ்மமானது அவித்யையினால் மறைக்கப்பட்டு ஜீவபாவத்தை அடைகிறது என்று இதர ஸித்தாந்திகள் சொன்னபோது அதை நாம் ஒப்புக் கொள்ளாமல், 'திரோதானம் என்பது ஸ்வரூப நாசமே' என்று கண்டித்துள்ளோம். நமக்கும் அது பொருந்துமன்றோ? ஆகையால், திரோதானம் சொல்ல முடியாது என்றால், நம் ஸித்தாந்தத்திலுள்ள விசேஷத்தைக் கூறுகிறார். பிற மதத்தவர் நிர்விசேஷமான வஸ்துவை ஸ்வயம்ப்ரகாசம் என்கிறார்கள். அதனால் அதற்குத் திரோதானம் சொல்வது ஆத்மநாசத்தில் முடியும். நாம் ஸவிசேஷமானதை ஸ்வயம்ப்ரகாசம் என்கிறோம். விசேஷணத்திற்குத் திரோதானத்தைச் சொல்லுகிறோம். அதனால் ஸ்வரூபத்திற்கு நாசம் ஏற்படாதன்றோ? இங்கு விசேஷம் ஆநுகூல்யம். அது ப்ரகாச ஸ்வரூபத்தைக் காட்டிலும் பின்னம்—வேறுபட்டது. ஸுகம்என்பது தான் ஆநுகூல்யம். ஆநுகூல்யத்தில் தாரதம்யம் இருப்பதனால் மஸ்ருணம் என்றும்,தீவ்ரம் என்றும் அது இருவகைப்பட்டது. இவற்றுள் மஸ்ருணம் என்பது எப்பொழுதும் ப்ரகாசிக்கிறது. ஸுஷுப்தி தசையிலும் ஸுகம் இருந்ததாக, தூங்கி எழுந்தபிறகு 'ஸுகமஹமஸ்வாப்ஸம்—ஸுகமாக நான் தூங்கினேன்' என்று தோன்றுவதனால் மஸ்ருணம் என்பது ஸர்வதா இருக்கிறது. தேஹி ...ஸுஷுப்திவிஷயோபி ஸ்வப்ரகாச வ்ருத்யா ஸாக்ஷாதேவ அநுபூயதே. இதனால், மஸ்ருணமான ஆநுகூல்யம் தர்மிபாஸ்யம் என்று சொல்லப்பட்டதாகிறது.

தீவ்ர ஆநுகூல்யம் விலக்ஷணமானது; சாஸ்த்ரத்தால் அறியத்தக்கது; கர்மாவினுல் மறைக்கப்படுகிறது. ஆத்மவிஷயக விசதஜ்ஞாநத்தினுல் உண்மையை மறைக்கும் கர்மாக்கள் நாசத்தையடைந்தவளவில் தர்மபூதஜ்ஞாநத்திற்கு விஷயமாய்க் கொண்டு ப்ரகாசிக்கிறது. இதனுல் தீவ்ர ஆநுகூல்யம் தர்மபூதஜ்ஞாநத்துக்கு விஷயமாய்கொண்டு ப்ரகாசிக்கிறது— என்று சொல்லப் பட்டதாகிறது.

ஆக, ஆநுகூல்யம் மஸ்ருணம் தீவ்ரம் என்று இரண்டு விதம். மஸ்ருணம் தர்மிபாஸ்யம். தீவ்ரம் தர்மபூதஜ்ஞாநத்திற்கு விஷயமாய்க்கொண்டு ப்ரகாசிக்கிறது என்றன்றோ தேசிகனுக்கும் தேசிகனுன வாதிஹம்ஸாம்புவாஹாசார்யர் ந்யாயகுலிசத்தில் அருளிச்செய்துள்ளார்.

இங்கு, எந்த ஆநுகூல்யத்திற்கு ஸ்வயம்ப்ரகாசத்வத்தை அருளிச்செய்தார்?

"कर्मण: क्षये स्वयमेव प्रकाशते"।

என்று உள்ளதே என்னலாம், 'ஸ்வயமேவ ப்ரகாசதே யத்வா ததாநீம்' என்பதுவரை அதிகமான பாடம். பிற் சேர்க்கை என்ன வேண்டும். தேசிகன் திருவுள்ளம் பற்ருதது. இதைப் பிறகு நிருபணம் பண்ணுகிறேம். ஆகையால், ஆநுகூல்யம் ஸ்வயம்ப்ரகாசம் என்னும் பக்ஷத்திற்கு ந்யாயகுலிச ஸ்ரீஸூக்திகள் ஈஷத்தும் ப்ரமாணம் ஆகமாட்டாததுடன் தர்மிபாஸ்யத்வத்திற்கு ப்ரமாணமாகவும் ஆகிறது. ஆகையால்தான் பூர்வாசார்யர்களில் ஒருவரும் இந்த ஸ்ரீஸூக்தியை ப்ரமாணமாக எடுக்கவில்லை. இந்த விஷயத்தில் ஸ்ரீஸ்வாமி தேசிகனின் ஸ்ரீஸூக்திகளை ஸேவித்து மகிழலாம். ந்யாயகுலிச ஸ்ரீஸூக்திகளுக்குத் தமிழில் ஸ்வாமி அர்த்தம் அருளிச்செய்துள்ளார். காண்மின்—

"ननु अयमात्माचेत् स्वप्रकाश: என்று ஆரம்பித்து स्वरूपनाशः तेषां आपाद्यते इति चेत् என்கிற வரையிலான பங்க்திகளுக்கு விரோத பரிஹாரத்தில் தமிழில்அர்த்தம் அருளிச்செய்துள்ளார். – ஸ்வயம்ப்ரகாச ஸ்வபாவமான ஜ்ஞாநம் ஒன்ருலே திரோஹிதமாய் ப்ரகாசியாதே கிடக்கிறது என்ருல் குத்ருஷ்டிகள் சொல்லும் கட்டளையாகாதோ? ஆன பின்பு ப்ரகாசியாதபோது ஜ்ஞாநம் இல்லையாக வேண்டாவோ? என்னில்" என்று.

ரஸிகர்கள் இரண்டு பங்க்திகளையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ஆசார்யன் ஸ்வயம்ப்ரகாசமான ஆத்மாவைப்பற்றிக் கேட்டார். தேசிகன் ஸ்வயம் ப்ரகாசமான தர்மபூதஜ்ஞாந விஷயமாக இந்தக் கேள்வியைக் கேட்டார். இதுதான் வித்யாஸம். மேலும், விரோதபரிஹார க்ரந்தத்தில், "இப்படி ஆத்மஸ்வரூபாநந்தம் நித்யமாக ப்ரகாசிக்கிறதாகில் திரோஹிதமாய்க் கிடந்து யோகதசையிலும் முக்ததசையிலும் ப்ரகாசிக்கிறது என்கை விருத்தமன்ருே? என்னில், [இங்கு ந்யாயகுலிச பங்க்தியை அநுஸரித்தேவேறு விதமாக ஆக்ஷேபிக்கிருர். ந்யாயகுலிசத்திலுள்ளபடி பதில் அருளிச்செய்கிருர்.] மந்தமான அநுகூல்யம் நிர்விகார ஸ்வரூப ப்ரகாசத்தாலே எப்போதும் தோற்றும். मन्दं सर्वदा भासते என்று குலிசத்தில் கூறப்பட்டுள்ளதற்கு வ்யாக்யானம். 'ஸர்வதா' என்பதற்கு, 'நிர்விகார ஸ்வரூப ப்ரகாசத்தாலே எப்போதும்' என்றுஅருளிஞர். இதனுல் தர்மிபாஸ்யம் என்பதை ஸ்பஷ்டமாகச் சொன்ஞர்.

தீவ்ரமான அநுகூலத்வம் அநாதிகர்மமூலப கவத் ஸங்கல்ப விசேஷத்தாலே திரோஹிதமாய், பின்பு யோகாதி தசைகளிலே தர்மபூதஜ்ஞாநத்தாலே அநுபாவ்யமாகிறது என்ற விரோத பரிஹார ஸ்ரீஸூக்தியுடன், तच्च विलक्षणानुकूल्यं . . . कर्मणा तिरोधीयते । आत्म-

विषय विशदज्ञानेन कर्मणः क्षये धर्मभूतज्ञानविषयभावापेक्षं प्रकाशते । என்றுள்ள குலிசபங்க்தியை ஒப்பிட்டு நோக்கவும்.

இவ்விதம் ந்யாயகுலிசத்திற்கு வ்யாக்யான ரீதியில் விரோதபரிஹாரம் அமைந்துள்ளது - மஸ்ருணம் என்று சொல்லப்படும் மந்தாநுகூல்யம் நிர்விகார ஸ்வரூப ப்ரகாசத்தாலே எப்போதும் தோற்றும் (தர்மிபாஸ்யம்) என்றும் தீவ்ராநுகூல்யம் கர்மதிரோஹிதமாய் யோகாதி தசைகளிலே தர்மபூதஜ்ஞாநத்தாலே அநுபாவ்யமாகிறது என்றும் ஸ்பஷ்டமாகஅருளிச் செய்திருக்கும் போது அநுகூல்யத்திற்கு ஸ்வயம் ப்ரகாசத்வத்தைப் பற்றி ப்ரஸக்தியே இல்லாததை ப்ரமாணமாகக் காட்டுவது எங்ஙனம் பொருத்தமுடையதாகிறது?

விரோத பரிஹாரத்தில் அடுத்தபடியாக "கைவல்யாநுபவத்தைப் பற்றி விசாரிக்கிறார். அங்கு ஆரம்பத்தில் "இப்படியானால் மந்தமான ஆநுகூல்யம் நித்யாநுபாவ்யமாய் நின்றது" என்றுள்ளதையும் கவனிக்க வேண்டும். மந்த—தீவ்ர ஆநுகூல்யங்களை ஸ்வயம் ப்ரகாசம் என்று ஸ்வாமி தேசிகன் ஓரிடத்திலும் கூறவில்லை. ந்யாயகுலிசத்தில் பதின்மூன்றும் வாதத்தில் அடுத்தபடியாக கைவல்யத்தைப் பற்றி தான் விசாரிக்கிறார்-ஆகையால் குலிசத்தில் பதின்மூன்றுவது வாதத்திலுள்ள முக்யமான ஸ்ரீ ஸூக்திகளுக்கு ஸந்தேகமற விரோதபரிஹாரத்தில் வ்யாக்யானம் பண்ணியருளினார் ஸ்வாமி தேசிகன். இவ்விதம் ஸுஸ்பஷ்டமாக அருளிச்செய்த பிறகு ஸம்சயம் வருவதற்கு ப்ரஸக்தியே இல்லை.

ஸ்ரீந்யாய குலிசத்தில் பதின்மூன்றும் வாதத்தின் ஆரம்பத்தில் 'ஆத்மஸ்வரூபாநந்தம் ஸ்வயம்ப்ரகாசமாய் நித்யமாய் இருக்கிறது என்றால் ஸம்ஸாராபாவ ப்ரஸங்க:' என்றல்லவோ கேட்டிருக்கிறார். அதற்கு

ஆநுகூல்யத்தை இரண்டாகப் பிரித்து இரண்டும் ஸ்வயம்ப்ரகாசம் என்று சொன்னால் முதலில் கேட்ட கேள்விக்கு நூறு வருஷங்களானாலும் பதில் சொன்னதாகாது. இரண்டும் ஸ்வயம்ப்ரகாசம் என்று சொன்னால் இரண்டாகப் பிரிப்பானேன்? இரண்டாகப் பிறித்து தீவ்ரத்திற்கு தர்மிபாஸ்யத்வமோ ஸ்வயம் ப்ரகாசத்வமோ சொல்லாமல், அதற்கு அநாதிகர்மமூலமாக பகவத் ஸங்க்ல்பத்தால் திரோதானம் சொல்லி தர்மபூதஜ்ஞானத்தினால் க்ரஹிக்கப்படுகிறது என்று சொல்லி இருப்பதனால்தானே ஸமாதானம் சொல்லப் பட்டதாகிறது? இதைத்தானே ஸ்வாமி தேசிகன் ஸந்தேஹமற விரோதபரிஹாரத்தில் அருளிச் செய்துள்ளார்.

இவ்விதமே ந்யாய குலிசத்திற்கு அர்த்தம் சொல்ல வேண்டும் என்பது ஸ்வாமிக்குத் தெரியாததா என்ன? நன்றாகத் தெரியும். அதனால்தான் ந்யாய குலிசத்தில் உள்ள ஆரம்ப கேள்வியையும் விட்டார். கடைசியில் धर्मभूतज्ञानापेक्षंप्रकाशते என்கிற பங்தியையும் விட்டார். நடுவில் मसृणंसर्वदाप्रकाशते என்பதற்கு அடுத்துள்ள பங்திகளை விட்டு முக்யமாக स्वप्रकाशवृत्त्यासाक्षादेवानुभूयते என்பதையும் விட்டு, தமக்கு அநுகூலமான பங்திகளை ஒன்றாகச் சேர்த்து குலிசத்தில் அப்படியே இருப்பதுபோல் பிறர்களை ப்ரமிக்கும்படி செய்தாயிருக்கிறது. ஏன்? ஸாரபோதினி நிர்வாஹத்தை கண்டிக்க வேண்டும் என்கிற அபிநிவேசம்தான் முக்யகாரணம். ஆப்தர்களே இவ்விதம் செய்தால் இனி நமக்கு உண்மையான அர்த்தத்தைக் கூறக்கூடியவர்கள் யார் இருக்கிறார்கள்?

3. அடுத்தபடியாக “ஆநுகூல்யம் அஜடம்” என்று ந்யாய குலிசபங்திகளைக் கொண்டு அருளிச் செய்கிறார். ரக்ஷாக்ரந்தத்தில் கூறியுள்ள தமிழ் விவரணத்தையும் குலிசபங்தியையும் அப்படியே ஒப்புக் கொள்வதற்கில்லை. முன்னும் பின்னும உள்ள பங்தி

களை மறைத்து அதன் உண்மையான தாத்பர்யங்களைச் சொல்லாமல் தமது நிர்வாஹத்திற்கு ஏற்ப சில பங்திகளுக்குமட்டும் அர்த்தை சொல்லி இருப்பதைப் பற்றித்தான் சோகிக்க வேண்டியிருக்கிறது. குலிசத்திலுள்ளபடியே எழுதி அதன் கருத்தைக் கூறுகிறோம்.

ननु च आत्मनस्स्वप्रकाशत्वे स्वाभाविकत्वे च तस्य, विशिष्ट सुखस्वरूपत्वस्यापि कथमप्राकश:?न हि जडमपि किञ्चिदस्ति स्वरूपमस्येति युक्तम्, 'स यथा सैन्धवधनोऽनन्तरोऽबाह्यः कृत्स्नो रसधन एव एवंवा अरे अयमात्माऽनन्तरोऽबाह्यः कृत्स्नः प्रज्ञानधन एव'' इत्यादि श्रुतेः। सत्यमेवम्, अजडस्वरूप स्वधर्मएवायमात्मा, तथापि स्वतस्सर्वगोचरस्य धर्मभूतस्य ज्ञानस्य संसारदशायां यथा कर्मणा सङ्कोचः, यथा च तस्य प्रसरणापेक्षस्य प्रकाशस्य सुषुप्त्यादौ तदभावादप्रकाशः, तथा स्वरूपानुकूल्यविशेषस्यापि धर्मभूतज्ञान विषयीभावापेक्षस्य तदभावादप्रकाश इति ॥

இதன் கருத்து — ஆத்மாவிற்கு ஸ்வயம்ப்ரகாசத்வமானது ஸ்வாபாவிகம் என்று சொன்னால் தீவ்ராநுகூல்யமானது ஏன் ப்ரகாசிக்கவில்லை? [ஆரம்பத்தில் மஸ்ருணம் ஸர்வதா ப்ரகாசதே என்று சொல்லியிருக்கிறார். அதேபோல் தானே தீவ்ராநுகூல்யமும் ப்ரகாசிக்கவேணும். அவ்விதம் சொல்லாமல் தர்மபூதஜ்ஞாநத்திற்கு விஷயமாகியே ப்ரகாசிக்கிறது என்று நிர்த்தாரணம் செய்வானேன் என்று சங்கையின் தாத்பர்யம்.] இதற்கு ஆத்மாவிலுள்ள தீவ்ராநுகூல்யமானது ஜடமாகையால் ப்ரகாசிக்கவில்லை என்று பதில் சொல்வது உசிதமாகாது. ஏனென்றால் ''स यथासैन्धवघनः...'' என்ற ச்ருதி ஆத்மாவும் அதனுடைய தர்மமும் ஜ்ஞாநஸ்வரூபம் என்று சொல்லுவதால் தீவ்ராநுகூல்யம் ஜடம் என்னப் போகாது. அதை அஜடமென்றே

சொல்ல வேண்டும்'' என்று பூர்வபக்ஷி கூறுகிறான். ஸித்தாந்தி ஸமாதானம் சொல்ல ஆரம்பிக்கும்போது ''ஸத்யமேவம்'' என்று அர்த்தாங்கீகாரம் பண்ணு கிறார். அதாவது, ''அஜடம் என்று ஒப்புக்கொள்ளு கிறேன். தர்மபூதஜ்ஞாநநிரபேக்ஷமாக ப்ரகாசிக்கிறது என்பதை ஒப்புக்கொள்வதற்கில்லை'' என்கிறார். ''ஆத் மாவின் ஸ்வரூபமும் அதன் தர்மமும் அஜடமே. ஆகிலும் தர்மபூதஜ்ஞாநமானது விபுவாய் எல்லா இடங்களிலும் வ்யாபித்திருந்தாலும் ஸம்ஸார தசை யில் புண்ய பாபரூப கர்மாவினால் அதற்கு ஸங்கோசம் ஏற்படுகிறது. சக்ஷுராதி இந்த்ரியங்களின் த்வாரா ப்ரஸரணத்தினாலேயே—தததீனமாகவே— அவைகளின் மூலமாகவே தர்மபூதஜ்ஞாநமானது உண்டாகிறது. தூங்கும்போது இந்த்ரியங்களின் த்வாரா ப்ரஸரணம் இல்லாமையால் தர்மபூதஜ்ஞாநத்திற்கு ப்ரகாசமில்லை. அதேபோல் தீவ்ராநுகூல்யமானது தர்மபூதஜ்ஞாநத் திற்கு விஷயமானால்தான் ப்ரகாசிக்கும் என்பதால் தர்ம பூதஜ்ஞாநம் இல்லாமல் அது ப்ரகாசிக்காது என்றே சொல்ல வேண்டும்.'' ஆக இவ்வளவால் தீவ்ராநு கூல்யமானது தர்மபூதஜ்ஞாநத்திற்கு விஷயமாகாமல் தானாக ப்ரகாசிக்காது என்று நிர்த்தாரணம் பண்ணின தாயிற்று. ஆத்மாவைப் போலும் தர்மபூதஜ்ஞாநத்தைப் போலும் தீவ்ராநுகூல்யத்திற்கு ஸ்வயம்ப்ரகாசத்வம் இல்லை என்று முடிவாயிற்று.

இதற்குமேல், ''அஜடமாக ஒப்புக்கொண்டால் அது ஸ்வயம்ப்ரகாசமாகத்தானே இருக்க வேண்டும். அஜடம் என்று ஒப்புக்கொண்டு தர்மபூதஜ்ஞாநத்திற்கு விஷயமானால்தான் ப்ரகாசிக்கும்'' என்று சொல்லுவது பரஸ்பரம் வ்யாஹதபாஷணமாகாதோ?'' என்று அடுத்த படியாக ந்யாயகுலிசத்திலேயே சங்கித்துக்கொண்டு ஸமாதானம் கூறியிருப்பதைக் கேண்மின்.

தீவ்ராநுகூல்யவிசேஷம் ஸ்வயம் ப்ரகாசம் என்னும் விஷயத்தில், ''सुखमात्यन्तिकं यत्तत् बुद्धिग्राह्यं'' என்ற அபவாத

சாஸ்த்ரம் இருப்பதால் தோஷமில்லை. அதாவது தீவ்ராநுகூல்யமானது தர்மபூதஜ்ஞானத்தினால் க்ரஹிக்கப்படுகிறது என்று கீதையில் சொல்லியிருப்பதால் ஸ்வயம்ப்ரகாசத்வத்தை அபவாத சாஸ்த்ரம் கண்டிக்கிறது. இதனால் ஸ்வயம்ப்ரகாசத்வத்தை ஒப்புக்கொள்வதற்கில்லை என்றே மறுபடியும் ஸமாதானமருளிச்செய்தார். ச்ருதியானது முக்ததசையில் ஆவிர்பவிக்கப் போவதைச் சொல்லிற்று என்கிறார்.

ந்யாயகுலிச பங்க்திகள் கீழே தரப்படுகின்றன—

ननु – कथं विषयीभावापेक्षं स्वप्रकाशत्वमिति । व्याहतमेतत्, नैरपेक्ष्यलक्षणत्वात् स्वप्रकाशत्वस्य । उच्यते–सत्यमेवम् । तथापि धर्मभूतज्ञानविशेषस्य स्वप्रकाशविशेषापवादत्वादिदमुच्यत इत्यदोषः । 'सुखमात्यन्तिकं यत्तद्बुद्धिग्राह्यमतीन्द्रियम्' 'वेत्ति' इत्येवमादिवचनानुसारेण तु विषयत्ववादः । स्वतस्स्वप्रकाशमालम्ब्य प्रज्ञानघन एवेत्यादिश्रुतिरुपपद्यते । तच्च रूपं मुक्तावेवाविर्भवति ।

இவ்விதம் பல ப்ரகாரமாக ஆக்ஷேபங்களைச் செய்து அதற்குத் தீவ்ராநுகூல்யம் தர்மபூதஜ்ஞானத்திற்கு விஷயமாய்த்தான் ப்ரகாசிக்கின்றது - ஸ்வயம்ப்ரகாசம் அல்ல என்று பல தடவை ஸமாதானம் கூறியிருந்தும், அதைமறைத்து, "ஸ்வரூபாநுகூல்யம் ஸ்வயம்ப்ரகாசம் என்றும், அஜடம் என்றும் ந்யாயகுலிசத்தில் அப்புள்ளார் ஸித்தாந்தம் என்று தேறியது. நிபுணதீக்கள் இவற்றில் தோஷங்களைக் கண்டுகொள்வார்களோ? என்று ரக்ஷாக்ரந்தகாரர் எழுதியிருப்பது ஆச்சர்யப்படத்தக்கதாக இருக்கிறது. மந்தமதிகளும் இதிலுள்ள தோஷங்களை எளிதில் தெரிந்துகொள்ளக்கூடியதாக இருப்பதால் நிபுணதீக்கள் வெறுக்கக்கூடியதாய் இருக்கிறது என்பதில் ஸந்தேகப்படவும் வேண்டுமோ?

இந்த ஸ்வாமி 'ஸாராஸ்வாதினீ ரக்ஷா' என்ற க்ரந்தத்தில் ஸாராஸ்வாதினீ க்ரந்தகர்த்தாவின் ஸித்தாந்தத்தையே கண்டித்துள்ளார். அலப்யலாபத்தில் 235-ஆம் பக்கத்தில்

अत्र एकत्ववादीनां धर्मिभास्यत्वमिति दशोपनिषद्भाष्यकार-पक्षः । धर्मभास्यत्वमिति साक्षात्स्वामीति विख्यातानां पक्षः इति पक्षभेदो वर्णितो लक्ष्यते ।

என்று உள்ளதைப் பார்க்க வேணும். ந்யாயகுலிசத்தில் உள்ளபடியேயன்றோ ஸாக்ஷாத்ஸ்வாமியும் தர்ம பாஸ்யம் என்று திருவுள்ளம் பற்றியிருக்கிறார் என்று தெரிகிறது. இதை ஒப்புக்கொள்ளாத வகையில் ஸ்வயம் ப்ரகாசத்வத்தை விடாமல் எழுதுவானேன்? உபநிஷத் பாஷ்யகாரர் பக்ஷம்தான் ஸ்ரீஸாரபோதினீகாரர் பக்ஷமும்.

இதுவரை ஆநுகூல்யாதிகள் அஜடங்கள் என்பதை ஒப்புக்கொண்டு ஸமாதானம் கூறப்பட்டது. இனி அவை ஜடங்களே என்பதற்கு ப்ரமாணம் காட்டுகிறோம். தத்வமுக்தாகலாபத்தில் தத்த்வங்களை விபாகம் பண்ணிச் சொல்லும்போது,

द्रव्याद्रव्यप्रभेदान्मितमुभयविधं तद्विदस्तत्त्वमाहुः
द्रव्यं द्वेधा विभक्तं जडमजडमिति प्राच्यमव्यक्तकालौ ।
अन्त्यं प्रत्यक् पराक् च प्रथममुभयथा तत्र जीवेशभेदात्
नित्याभूतिर्मतिश्चेत्यपरमिह जडामादिमां केचिदाहुः ॥

தத்த்வவித்துக்கள் த்ரவ்ய அத்ரவ்யபேதேந தத்த்வம் இரண்டு விதம் என்கிறார்கள். அவைகளில் த்ரவ்யமானது ஜடம் அஜடம் என்று இருவகைப்பட்டது என்கிறார்கள். அவைகளில் முதலாவதாகச் சொல்லப்பட்ட ஜடமானது அவ்யக்தம்-ப்ரக்ருதி, காலங்கள். இரண்டாவதாகக் கூறப்பட்ட அஜடமானது ப்ரத்யக், பராக்

என்று இரண்டு விதம். முதலாவதான 'ப்ரத்யக்—ஜீவ, ஈசபேதாத் இரண்டு விதம். நித்யவிபூதியும், தர்ம பூதஜ்ஞாநமும் பராக். முதலாவதாகச் சொல்லப்பட்ட நித்யவிபூதியை ஜடம் என்றும் சிலர் சொல்லுகிறார்கள். ரக்ஷாக்ரந்தகாரர் கூறுகிறபடி தீவ்ராநுகூல்யம் அஜடமானால் இந்த ச்லோகத்தில் சொல்லப்பட்ட ஜீவ, ஈச, நித்யவிபூதி, தர்மபூதஜ்ஞாநங்களோடு தீவ்ராநு கூல்யத்தையும் சேர்த்திருப்பாரன்றோ? அவ்விதம் சேர்க்காததால் அஜடங்கள் நான்குக்குமேல் இல்லை என்று தேறுகிறது அல்லவா? ஆகையால் ஆநுகூல் யாதிகளுக்கு ஸ்வயம்ப்ரகாசத்வத்தை ஒப்புக்கொள் வதற்கில்லை.

ஸ்ரீஸ்வாமி தேசிகனின் ஸித்தாந்தத்தை அநு ஸரித்து, கரூர் ஸ்வாமி என்று ஸுப்ரஸித்த பண்டித ராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீசைலமஹாதேசிகன் அருளிச் செய்த 'யதீந்த்ர ஸித்தாந்த ஸங்க்ரஹத்தில் 16-ஆம் பக்கத்தில் —

अजडद्रव्यतत्वं तु चतुर्धा प्रविभज्यते ।
जीवेशधर्मधीनित्यविभूतीनां प्रभेदतः ॥
अणुचेतनता जीवलक्षणं श्रुतिसंमतम् ।
ईशव्यावृत्तये प्रोक्तमणुत्वं जीवलक्षणे ॥
प्रत्यक्त्वादिविशिष्टस्य स्वप्रकाशत्वमिष्यते ।
अहमित्येव सततं स्वरूपं स्फुरति स्वयम् ॥
स्वापेऽप्यहमिति स्फूर्तिराप्रबोधाच्च भाषिता ॥
अहंत्वमेव प्रत्यक्त्वं प्रकारस्तत्र भासते ।
अन्यथा निर्विशेषस्वप्रकाशः स्यात् कुदृष्टिवत् ।
श्रीतत्वटीकासर्वार्थसिद्ध्यादौ विश्रुतं च तत् ॥

स्वप्रकाशान्तरं कैश्चित् प्रत्यक्त्वादिकमीरितम् ।
उपेक्ष्यमेतन्निपुणैः दूषणैराविलं यतः ॥

என்று அருளிச்செய்துள்ளதை உற்று நோக்கவும். "அஜட த்ரவ்யம் நான்குதான். ப்ரத்யக்த்வாதிகள் தர்மி பாஸ்யங்களே. தத்வடீகை ஸர்வார்த்தஸித்தி முதலிய க்ரந்தங்களில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் (அஜடம் என்று) ஸ்வயம்ப்ரகாசமென்று சொல்லும் பக்ஷத்தை நிபுணர்கள் நிராகரிக்க வேண்டும்" என்று ஸுஸ்பஷ்டமாக அருளிச்செய்தார். ரக்ஷாக்ரந்தகாரரும் மற்ற வித்வான்களும் இந்த ஸ்வாமியைத் தடஸ்தராகவும் ப்ராமாணிகராகவும் ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

மஹாமஹோபாத்யாய லக்ஷ்மீபுரம் ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி என்னும் மஹாவித்வான் தாம் அருளிச்செய்த தர்சனோதயம் என்ற க்ரந்தத்தில் 210-ஆம் பக்கத்தில், "जीवेश्वरधर्मभूतज्ञानशुद्धसत्त्वानां चतुर्णां शास्त्रेषु ज्ञानपदेन व्यवहारः" என்று அருளிச்செய்துள்ளதையும் பார்க்கலாம்.

பல சாஸ்த்ர க்ரந்தங்களுக்குத் தமிழில் விரிவுரை இயற்றியுள்ள வித்வான் ஸ்ரீ வி. கே. ராமானுஜாசாரியர் ஸ்வாமி யதீந்த்ரமததீபிகையில் 140-ஆம் பக்கத்தில், "த்ரவ்யங்கள் ப்ரக்ருதி, காலம், சுத்தஸத்வம், தர்மபூத ஜ்ஞானம், ஜீவன், ஈச்வரன் என்று ஆறுவகைப்படும். ஜீவன்களுடையவும், பகவானுடையவும் ஜ்ஞானங்களைக் கொண்டே ப்ரக்ருதியும் காலமும் தோன்றுகின்றன. ஆகையால் அவைகள் ஜடங்கள். மற்ற நான்கு த்ரவ்யங்களும் வேறொன்றின் உதவியில்லாமல் தாங்களே தோன்றுகின்றன. ஆகையால் அவை ஸ்வயம்ப்ரகாசங்கள் என்றும் அஜடங்கள் என்றும் சொல்லப்படுகின்றன" என்றே எழுதியுள்ளார். இவ்விதம் எல்லோரும் ஏககண்டமாகக் கூறும்போது இதற்கும் ஏதாவது யுக்திகளைச் சொல்லி ஸ்வயம்ப்ரகாசமாகவும் அஜடமாகவும் ஆநுகூல்யாதிகளை ஸ்தாபிப்பாருளரோ?

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹத்தில் 7-ஆம் பக்கத்தில் "ஜீவேச்வரநித்யவிபூதீநாமபி அஜடத்வம் ஸாதர்ம்யம்" என்று அருளிச்செய்துள்ளார். ஸ்ரீஸார போதிநியிலும் ப்ரத்யக்த்வ அநுகூலத்வ, ஏகத்வங் களும் ஸ்வயம்ப்ரகாசங்கள் என்று ஒப்புக்கொண்டால், "अजत्यं प्रत्यक् पराक् च..." என்கிற ச்லோகத்தில் பராக்கான (நித்யவிபூதி மதி) இரண்டுக்கே அஜடத்வம் — ஸ்வயம் ப்ரகாசத்வம் சொல்லியிருப்பதால் அத்தோடு விரோதிக் கும்" என்று அருளிச்செய்துள்ளார்.

ஏதாவதா ப்ரபந்தேந அநுகூலத்வாதிகள் அஜடங் கள் அல்ல; ஜடங்களே. ஆகையால் அவை ஸ்வயம் ப்ரகாசங்கள் அல்ல, தர்மிபாஸ்யங்களே என்று நிர்ண யிக்கப்பட்டதாகிறது.

ஸ்ரீபாஷ்யத்தில் "அஜடத்வமிதி கிமபிப்ரேதம்" என்று கேள்வி கேட்டுக்கொண்டு ஐந்து விதமாக விகல்பித்து விசாரம் செய்யும்போது

अव्यभिचरितप्रकाशसत्ताकत्वमपि सुखादिषु व्यभि-चारात् निरस्तम् ।

என்று அருளிச்செய்துள்ளார். ஸுகஸ்ய—ஆநுகூல் யஸ்ய அஜடத்வம் அநபிதமாகையாலன்றோ வ்யபிசாரம் சொல்லியிருக்கிறார். ஸ்ரீஸ்வாமி எழுதும் பாணியில் இந்த தூஷணம் எழுதப்பட்டது.

இந்த ஸ்வாமி பல இடங்களில் ஸைந்தவகனச்ருதியை எடுத்து, ச்ருதப்ரகாசிகையில் தர்ம, தர்மி இரண்டு களையும் ரஸகநமாகச் சொல்லியிருக்கிறது என்றும், தத்வடீகையில் 'ஸர்வாம்சேப்யேகரஸ்யத: ஜடாம்ச ரஹிதத்வம்' என்று சொல்லி இருக்கிறது என்றும், ந்யாயகுலிசத்தில் இந்த ச்ருதியை எடுத்து ஸைந்தவகந-த்ருஷ்டாந்தத்தால் அஜடம் என்று ஸ்தாபித்துள்ளார் என்று சொல்லி ஆநுகூல்யாதிகளுக்கு அஜடத்வத்தை

ஸ்தாபித்துள்ளார். விவேகிகள் இவ்விஷயத்தை நன்ருகப் பராமர்சிக்க வேண்டும்.

ஸ்ரீபாஷ்யத்தில் "एवं आत्मा चिद्रूप एव । चैतन्यगुणक इति । चिद्रूपता हि स्वयंप्रकाशता । तथाहि श्रुतयः – स यथा सैन्धवघनः . . . .प्रज्ञानघन एव"

என்று அருளிச்செய்துள்ளார். இவ்விடத்தில் "ஆத்மாவும் அதன் குணமான தர்மபூதஜ்ஞாநமும் சித்ருபம்" என்றும், அதனுல் ஸ்வயம்ப்ரகாசம் என்றும் ஸாதித்தார். ஆத்மாவும் தர்மபூதஜ்ஞாநமும் சித்ருபம்-ஜ்ஞானைகாகாரம்-அஜடம் என்பதற்கு ப்ரமாணங்களைக் காட்டுகிருர், 'ததாஹிச்ருதய:' என்று. 'ஸ யதா ஸைந்தவகந:' என்ற ச்ருதிக்கு வ்யாக்யானம் செய்தருளும்போது ச்ருதப்ரகாசிகையில்

"दार्ष्टान्तिकविषयः अबाह्यशब्दः धर्मिपरः । अनन्तरशब्दः धर्मपरः कृत्स्नशब्दः तयोः एकदेशजडत्वांशव्युदासार्थः"

என்று அருளிச்செய்துள்ளார். இவ்வர்த்தத்தையே தத்துவடீகையில் ச்லோகமாக அருளியுள்ளார் ஸ்வாமி தேசிகன்.

இவ்விடங்களில் தர்மசப்தத்திஞல் தர்மபூதஜ்ஞாநத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர ப்ரத்யக்த்வாதிகளையும் சேர்த்துக்கொள்வதற்கு ப்ரஸக்தி என்ன? அவ்விதமாகில் அணுத்வ சேஷத்வாதிகளையும் சேர்த்துக்கொள்ளலாமா.(மோ?) அடுத்தபடியாக, नहि विज्ञातुर्विज्ञातेः विपरिलोपो विद्यते என்கிற ச்ருதியை எடுத்துள்ளார். அதனுல் ஜ்ஞாநத்திற்கே தர்ம தர்மிபாவத்தைக் காட்டுகிருர். (ஜ்ஞாபயதி) தர்மதர்மிபாவம் ஜ்ஞாபயதி 'நஹி விஜ்ஞாது: இதி' என்று ச்ருதப்ரகாசிகையில் அவதாரிகை இருப்பதைக் காணலாம். ஆகையினுல் இவ்விடத்தில் ப்ரத்யக்த்வாதிகளுக்கு ப்ரஸக்தியே இல்லை.

முன்பு ந்யாய குலிசத்தில் கூறப்பட்டதற்கு அதே ந்யாய குலிசத்தில் அடுத்தவரியில் கூறப்பட்டதைக் கொண்டு ஸுஸ்பஷ்டமாகப் பதில் கூறப்பட்டுள்ளது.

அதேபோல் ச்ருதப்ரகாசிகையிலேயே अहमर्थः प्रत्यक्त्वेन अनुकूलत्वेन एकत्वेन च स्वतो भाति। नह्यर्थान्तरं अहमर्थः विषयीकर्तुमलम्

என்றுள்ளதை ப்ராமாணிகர்கள் பார்க்கவேண்டும்: அஹமர்த்தத்திற்கு ப்ரத்யக்த்வாதி ப்ரகாரக ஸ்வாத்ம பாந விசேஷ்யத்வ மன்றோ சொல்லப்பட்டது.

இதற்கு ஸ்வாமி விசித்ரமாக அர்த்தம் செய்தருளி யுள்ளதையும் கேண்மின். "லக்ஷ்ம்யாஸஹஹ்ருஷீகேச: ...... ரக்ஷக: என்கிறவிடத்தில் லக்ஷ்மிக்கும் ரக்ஷகத் வத்தைக் கொண்டாற்போலவும், 'புத்ரேணஸஹ ஆகத: பிதா" என்கிற விடத்தில் போலவும் அர்த்தம் நிர்ண யிக்க வேண்டும்' என்றும், பிறகு இவ்விடத்தில் ஸஹசப் தயோகம் இல்லாவிடினும் த்ரிதீயை உண்டு. வ்ருத்தோ யூநா இத்யாதி நிர்தேசாத்' என்று கௌமுதீ. அடுத்த வாக்கியத்தில் உள்ள நஹி அர்த்தாந்தரம் அஹ மர்த்த: விஷயீகர்த்துமலம்" என்கிற வாக்ய சேஷ மானது ப்ரத்யக்த்வாதி ஸ்வயம்ப்ரகாசத்வத்தையே த்ருடீகரிகின்றது... முக்யவிசேஷ்யமாய் ஸ்வவாக்யத் தில் நிர்திஷ்டமான அஹமர்த்தத்தைக் காட்டிலும் வேறுபட்டதை- அஹமர்த்த பின்னமான ப்ரத்யக்த்வம் முதலியதை (விஷயீகரிக்காது)... ஸஹயோகேத்ரிதீயை யை விவக்ஷித்து ப்ரத்யக்தவாதிகளோடு கூட அஹ மர்த்தம் ஸ்வயம் ப்ரகாசம் என்று ப்ரக்ருதச்ருத்ப்ரகாசி காஸித்தாந்தமாயிற்று. இதுவே ஸ்ரீமத் ஸாராஸ்வாதி நீஸித்தாந்தம்" என்று.

இவ்விஷயத்தைப் பராமர்சிப்போம். 'லக்ஷ்ம்யா ஸஹஹ்ருஷீகேச:" என்கிறவிடத்தில் போல "அஹ மர்த்த: ப்ரத்யக்த்வேந, அநுகூலத்வேந, ஏகத்வேந என்கிறவிடத்தில் ஸஹசப்தம் இல்லாவிட்டாலும் த்ரிதீ யையால் ஸஹயோகத்ரிதீயை விவக்ஷித்து ப்ரத்யக்

த்வாதிகளுடன்கூட அதாவது ப்ரத்யக்த்வாதிகளும் அஹமர்த்தமும் ஸ்வயம்ப்ரகாசம் என்கிறார். இவ்வர்த்தம் ஆபாத ரமணீயமாக இருக்கிறது. த்ரிதீயைக்கு ஸஹசப்தார்த்தம் விவக்ஷிதம் என்கிறார். அதாவது ஸமுச்சயார்த்தம். இவ்விதமாகில் அங்குள்ள च (ச) காரத்திற்கு என்ன அர்த்தம்? அதைச் சொல்லாமல் மறந்துவிட்டாரே! சகாரத்திற்கு ஸமுச்சயார்த்தம் சொல்வதில் ப்ரயோஜனம் இல்லையன்றோ? ச்லோக பூரணார்த்தமன்றோ च वै तु என்பவைகளைச் சேர்ப்பார்கள்? வாக்கியங்களில் அவ்விதமன்றே. சகாரத்திற்கு அர்த்தம் சொல்ல வேண்டுமே, ஏன் மறந்தார்? நாங்கள் சொல்லுகிறோம், கேண்மின். சகாரத்திற்கு ஏவகாரத்தின் அர்த்தம் கொள்ள வேண்டும். ப்ரத்யக்த்வாதிவிசேஷணகத ஏவகாரமானது அயோகவ்யவச்சேதத்தைப் பண்ணிக் கொடுக்குமாதலால் "அஹமர்த்தமானது ப்ரத்யக்த்வாதிவிசிஷ்டத்வேனைவ பாஸதே" என்றல்லவோ ச்ருதப்ரகாசிகாசார்யர் திருவுள்ளம். இதனால் प्रत्यक्त्वादिप्रकारकस्वात्मभानविशेष्यत्वமே அர்த்தம் சொன்னதாகிறது. இதுவே ஸ்ரீஸாரபோதினீநிர்வாஹமாகும்.

"வாக்யசேஷத்தால் अन्यत्वप्रतियोगिक मुख्यविशेष्यமாய் ஸ்வவாக்யத்தில் நிர்த்திஷ்டமான அஹமர்த்தத்தையே கொள்ள வேண்டும்" என்கிறார், இவ்விதமாகில் இவர் கொடுத்த த்ருஷ்டாந்தத்தில் பெருமாளுக்கும் பிராட்டிக்கும் ரக்ஷகத்வம் சொன்னது பொருந்தாது. लक्ष्म्या सह हृषीकेशः रक्षकः, தத்பின்னர்கள் ரக்ஷகர்களல்லர் என்று சொல்லுகிறோம். இந்த ஸ்வாமி கூறியபடி, "தத்சப்தத்தாலே முக்ய விசேஷ்யமாய் இருக்கும் ஹ்ருஷீகேசனை எடுத்துக்கொண்டால் பிராட்டி தத்பின்னையாகையால் அவளுக்கு ரக்ஷகத்வம் இல்லை" என்றதாகிவிடும். இதனால் ஸ்வாமி தேசிகன் ஸித்தாந்தத்தையே தூஷித்ததாகும். ஆகையால் வாக்யகடகர்களான இருவரையும் எடுத்துக்கொண்டு மற்றவர்கள் ரக்ஷகர்களல்லர் என்றுதான் அர்த்தம் சொல்ல வேண்டும்.

ஆதலால் ஸ்ரீ ஸாரபோதிநியில் சொல்லியபடி அர்த்தாந்தரசப்தத்தால் ப்ரத்யக்த்வாதிகளைத் தவிர மற்றவைகளையே எடுத்துக்கொள்ள வேண்டும்.

4. ப்ரத்யக்த்வ ஸ்வயம்ப்ரகாசத்வம். "இனி ஆநுகூல்யம் போலே ப்ரத்யக்த்வமும் ஸ்வயம்ப்ரகாசம் என்பதை ந்யாயகுலிசத்திலேயே அப்புள்ளார் ஸமர்த்தனம் செய்திருப்பதை விவரணம் செய்கிறோம்" என்று எழுதியுள்ளார். கீழே ஆநுகூல்யம் ஸ்வயம்ப்ரகாசம் அன்று, தர்மிபாஸ்யமாயோ தர்மபூதஜ்ஞாநத்திற்கு விஷயமாயோ தான் ப்ரகாசிக்கும் என்பதை நிபுணதரம் உபபாதித்துள்ளோம். ஆகையால் "ஆநுகூல்யம் போலே" என்பதால் தர்மிபாஸ்யத்வத்தைத்தான் சொன்னதாகும்.

மேலும், இந்த ஸ்வாமி ஆரம்பத்தில் ப்ரமாண சரணராய்க் குலிசபங்க்திகளை ப்ரமாணமாகக் காட்டினார். குலிசபங்க்திகளை அக்ஷராஸ்யர்கள் பார்த்தால் தமது நிர்ணயம் நிலை நிற்காது என்று எண்ணியே இப்போது ஸமர்த்தனம் செய்ய ஆரம்பிக்கிறார். அதுவும் ஒரே இடத்தில் உள்ள பங்க்திகளைக் கொண்டு ஸமர்த்தனம் செய்ய முடியாமல் வேறு ஒரு வாதத்தில் உள்ளதைக் காட்டி ஸமர்த்தனம் பண்ணப் படாதபாடுபடுகிறார். ப்ரத்யக்த்வாதிகள் ஸ்வயம் ப்ரகாசங்கள் என்பதற்கு ப்ரமாணம் சொல்ல ஆரம்பித்த ஸ்ரீ ஸ்வாமி ஸமர்த்தனத்தில் இறங்கியதற்கு நாம் வருத்தப்பட வேண்டியதைத் தவிர்த்து ஸமாதானமும் கூற வேண்டுமோ?

5. அடுத்தபடியாக, ஸ்ரீ ந்ருஸிம்ஹராஜீய ஆநந்ததாயிநியில் ப்ரத்யக்த்வாதி ஸ்வயம்ப்ரகாசத்வ ஸமர்த்தனம் என்ற தலைப்பில் ஏதேதோ எழுதியுள்ளார். அவைகளை அப்படியே ஒப்புக்கொண்டு (க்ருத்வாசிந்தை

என்கிறபடி) பதில் எழுதுகிறோம். தத்வமுக்தாகலா பத்தின் ஆநந்ததாயினி வ்யாக்யானத்தில்,

''ज्ञातुर्ज्ञेयावभासो'' ''स्वस्यैवात्मा तु सिद्धिर्मतिमनुभवति स्वान्ययोरिति''

என்கிற ச்லோகவ்யாக்யாநங்களில் ''ப்ரத்யக்த்வாதீநாம் ஸ்வயம்ப்ரகாசத்வம் உண்டு என்பது மதாந்தரம்'' என்று அருளிச் செய்துள்ளதால், ப்ரத்யக்த்வாதிகளுக்கு ஸ்வயம்ப்ரகாசத்வத்தைத் தாம் அங்கீகரிக்கவில்லை என்று ஸ்பஷ்டமாக அருளிச்செய்தாராயிற்று.

ஆகையால், ரக்ஷாக்ரந்தகாரர் மத்யஸ்தராகச் சொன்ன ஸ்ரீ ந்ருஸிம்ஹராஜாசார்யர் ஆநந்ததாயினியில் இதர பக்ஷமாகச் சொன்னதை மறைத்து, அவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார், இவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார் என்றெல்லாம், இல்லாதவைகளை எல்லாம் எழுதியதால் என்ன ஸாதித்ததாகும்?

6. அடுத்தபடியாக, ''தேசிகஸாரஸ்ரீஸூக்தி'' என்பதைப்பற்றி விசாரிப்போம். இதன் தாத்பர்யத்தை ஸாரஸங்க்ரஹத்தில் ஸ்ரீ பரகாலயதீந்த்ர மஹாதேசிகன் ஸாராம்சமாய் விவரணம் செய்தருளினார். அதாவது ... என்று ஆரம்பித்து, சிலபங்க்திகள் அதில் கூறப்பட்டுள்ளதாக, குறிப்பிட்டுள்ளார். இதன் உண்மையைக் கேண்மின். பரகாலஸ்வாமி அருளிய ஸாரஸங்க்ரஹத்தில் ஒவ்வோர் அதிகாரார்த்தத்தையும் சுருக்கமாக ஸாதித்துள்ளார். வாக்கியங்களையோ பதங்களையோ விவரிக்கவில்லை. வேங்கடாசார்யஸ்வாமீ பரகாலஸ்வாமியின் நியமனத்தின் பேரில் வ்யாக்யானம் செய்துள்ளார். ப்ரதீகங்களை எடுத்து அர்த்தத்தை விவரித்து எழுதுகிறார். அதில், ஜ்ஞாநத்வமாவது கஸ்யசித்ப்ரகாசகத்வம் என்கிற இடத்தில், ஸாராஸ்வாதிநியிலுள்ள பங்க்திகளையே எழுதியுள்ளார். இந்த ஸ்வாமி ஏதேதோ எழுதியிருக்கிறாரே!

அந்தப் பங்க்திகள் எந்த க்ரந்தத்தில் இருக்கின்றன? இந்த ஸ்வாமி எடுத்தக்ரந்தத்திற்கு அனுகூலமல்லாத விதத்திலேயே அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, 'தன்னை ஒழிந்ததொன்றை' என்கிற இடத்தில் 'தன்னை—ஸ்வாத்மாநம், ஒழிந்தது—வர்ஜயித்வா, ஒன்றை—ஏகஸ்யாந்யஸ்ய, காட்டுகை—ப்ரதர்சநம். ஸ்வேநஸாகம் அஸ்ய ப்ரதர்சநமிதி (भा)பாவ:" என்று உள்ளதைக் காணலாம். 1936-ஆம் வருஷம் எம். பி. டி. பவர் முத்ராலயத்தில் பெங்களூர் ஸிடியில் அச்சிட்ட புஸ்தகத்தில் 200-ஆம் பக்கத்தில் உள்ள விஷயம் இது. ஸ்ரீஸாரபோதிநியில், 'தன்னை ஒழிந்தது—தன்னை விட்டது. ஸ்வப்ருதக்ஸித்தம். ஸ்வாப்ருதக்ஸித்தபிந்நம் இத்யர்த்த:' என்று அருளிச் செய்துள்ளார். இரண்டு வ்யாக்யானங்களுக்கும் மாறுபாடு இருப்பதாகத் தெரியவில்லையே?

7. அடுத்தபடியாக, 'சததூஷணீ' என்ற தலையங்கத்தின் கீழ் ஸம்விதநுத்பத்தி தூஷணவாதத்தில்(21-வது) என்று குறிப்பிட்டு, சததூஷணியிலுள்ள பங்க்திகளை எழுதி, அதற்குத் தமிழில் விளக்கம் செய்திருப்பதைப் பராமர்சிப்போம். இவ்விடத்திலும் அங்குள்ள பங்க்திகளை அப்படியே எழுதாமல் தமக்குத் தோன்றிய அர்த்தத்திற்கு அநுகுணமாக எழுதி விவரித்துள்ளதைப் பார்த்து அழுவதா? சிரிப்பதா?

சததூஷணியில் உள்ள பங்க்திகள்—

नापि द्वितीयः, अहमर्थविलक्षणाया निर्विषयायास्संविदोऽनुपलम्भनिरस्तत्वात् । मुक्तौ निर्विषयत्वस्य अन्यत्र प्रतिक्षेपात् । स्वाप-मद-मूर्च्छासु निर्विषयसंविदुपलम्भोऽस्तीति वाङ्मात्ररूपत्वात् ।

अहमर्थस्य तु स्वरूपमात्रप्रकाशात्मकस्य विषयान्तरविरहेऽपि घटादिविषयग्राहिसंविद्विलक्षणतया, तदाश्रयतया च

प्रतिपन्नस्य भवता संविद्विलक्षणतया अहङ्कारग्रन्थित्वाभ्युपगमात् ।

पक्षान्तरे तु तद्वदेव तद्धर्मभूतसंविदोऽपि सर्वदा निर्विषयत्वसाधनस्य उपलम्भनिरस्तत्वात् । सुषुप्तौ तु निर्विषयायास्तस्याः प्रकाशादर्शनात् । स्वमात्रप्रकाशस्याप्यहमर्थस्वरूपस्य अस्माभिः प्रत्यक्त्व-आनन्दत्वादि विशेषवत्तयै वस्वतःप्रकाशत्वाभ्युपगमेन क्वचिदपि निर्विशेषप्रकाशानभ्युपगमात् ।

यद्यप्यस्मत्पक्षे सुषुप्त्यादिषु धर्मभूता संवित् निर्विषया, तथापि साश्रयत्वादिभिः तदानीमपि न निर्धर्मकत्वम् ॥

இதன் பொருள்— [ஸம்விதநுத்பத்தி தூஷண வாத ஆரம்பத்தில் ஸம்விதநுத்பத்தியைச் சொல்லு பவரைக் கேட்கிறுர் - அஹமர்த்தத்தின் தர்மமான ஸம் வித் உண்டாகிறதில்லை என்று சொல்லுகிருயா? அல்லது நிர்தர்மகமாயும், நிர்விஷயமாயும், நிராச்ரய மாயுமுள்ள ஸம்வித்திற்கு உத்பத்தி கிடையாது என்று சொல்லுகிருயா? என்று விகல்பித்துக் கேட்கிருர். नाद्यः என்று ஆரம்பித்து முதல் பக்ஷத்தை தூஷித்தார்.] இப்பொழுது 'न द्वितीयः' என்று ஆரம்பித்து இரண்டாவது பக்ஷத்தை தூஷிக்க ஆரம்பிக்கிருர். இரண்டாவது பக்ஷத்தை இரண்டாக விகல்பித்துக் கேட்கிருர். "போ! நீர் இரண்டாவதாகச் சொன்ன விஷயசூந்ய, ஆச்ரய சூந்யமாகச் சொன்ன ஸம்வித்தானது அஹமர்த்தத் தைக்காட்டிலும் அதிரிக்தமா? அல்லது அஹ மர்த்தமேயா?

அஹமர்த்தத்தைக்காட்டிலும் அதிரிக்தமான நிர் விஷயமான ஸம்வித் என்பது ஒன்று கிடையாது. அநுபலப்தம் முக்திதசையிலும் நிர்விஷயத்வம் கிடையாது என்பதை முன்பொரு வாத்த்தில் ஸாதித்து

உள்ளோம். ஸ்வாப மத மூர்ச்சாதி ஸமயங்களில் நிர் விஷயமான ஸம்வித்தொன்று இருக்கிறது என்பது பேச்சளவிலேயே இருக்கிறது.

"தூங்கி எழுந்தவன் ஸுகமாகத் தூங்கினேன்" என்று பராமர்சிப்பதால் அநுகூலத்வ விசிஷ்ட க்ரஹணம் இருக்கிறது என்று ஸ்ரீபாஷ்யாதிகளில் நன்ருக நிருபணம் பண்ணப்பட்டுள்ளதிறே. ஆகையால் அஹமர்த்தாதிரிக்தமான நிர்விஷயமான ஸம்வித் கிடையாது. அதாவது நிர்விஷயமான தர்மியாகிற ஜ்ஞாநம் என்பது கிடையாது என்று அர்த்தம்.

द्वितीयं दूषयति (अहमर्थस्त्विति) அஹமர்த்தமே ஸம்வித் என்னும் பக்ஷத்தை இனி தூஷிக்கிருர். அஹமர்த்த மானது ஸ்வரூபமாத்ரப்ரகாசமாய், விஷயாந்தரத்தை க்ரஹிக்காவிட்டாலும் கடாதி விஷயங்களை க்ரஹிப் பவையாயும், ஸம்வித் விலக்ஷணமாயும், ஸம்விதா ச்ரயமாயும் தோன்றுகிற அஹமர்த்தமான ஆத்மாவை அப்படியே இசையாமல் ஜடமாக (ஸம்வித் விலக்ஷண மாகவன்ருே?) அஹங்காரக்ரந்தி என்று ஒப்புக்கொண் டிருக்கிருய். ஆக ஜடமான அந்த:கரணத்தையே அஹமர்த்தமாக இசையும் உனக்கு, "அஹமர்த்தமே ஸம்வித்" என்ற இவ் வாதம் பொருந்ாதன்ருே என்று இரண்டாவது பக்ஷத்தையும் தூஷித்தார்.

இதை ப்ரதிபக்ஷி ஆக்ஷேபித்துக் கூறுகிருன். அதாவது, "நீர் அஹமர்த்தமானது நிர்விஷயம் என்றும், அது ஜ்ஞாநஸ்வரூபம் என்றும் ஒப்புக்கொண்டிருக் கிறீரல்லவா? அதைப்போல் (உதாஹரணமாக—த்ருஷ் டாந்தமாகக் கொண்டு) உம்மால் தர்மபூதஜ்ஞாந மாகச் சொல்லப்பட்டதை நான் ஸம்வித் என்று சொல்லி அது நிராச்ரயமாயும் நிர்விஷயமாயும் உத்பத்தி இல்லாததாயும் இருப்பதாகக் கூறுகிறேன்,

அதாவது, நான் அந்த:கரணம் என்றும் ஸம்வித் என்றும் இரண்டு ஒப்புக்கொள்ளவில்லை. நீங்கள் அஹ மர்த்தமான ஸம்வித் எப்படி எப்படி இருப்பதாகச் சொல் லுகிறீர்களோ அப்படிப்பட்டதாய் ஸம்வித்தை நான் சொல்லுகிறேன். நீங்கள் சொல்லும் தர்மபூதஜ்ஞாந ஸ்தாநத்தில் அதைச் சொல்லுகிறேன்" என்றான்.

இந்த ஆக்ஷேபத்தைப் 'பக்ஷாந்தரே து' என்பதால் தூஷிக்கிறார். நீ ஸம்வித்திற்கு எப்பொழுதும் நிர் விஷயத்வம் சொல்லுகிறாயா? அல்லது ஸுஷுப்தி காலத்தில் நிர்விஷயத்வத்தைச் சொல்லுகிறாயா? எப் பொழுதும் நிர்விஷயமாகவே இருக்கிறது என்பது ப்ரத்யக்ஷ விரோதம் அதாவது ஸம்வித் கடபடாதிகளை விஷயீகரிப்பதால் ஸர்வதா நிர்விஷயமாகவே இருக் கிறது என்பது நிரஸிக்கப்படுகிறது.

ஸ்வாபதசையில் என்றால், உன் ஸித்தாந்தப்படி ஸம்வித் எப்பொழுதும் ப்ரகாசித்துக்கொண்டே இருக்குமாகையால் நிர்விஷயம் என்று சொல்ல முடி யாது. ப்ரகாசித்தால் அதைப்பற்றிய நினைவு—அநு ஸந்தானம் உண்டாகும். ஆகையால் ஸ்வாபதசை யிலும் நிர்விஷயம் என்று சொல்ல முடியாது. இவ்விதம் ப்ரதிபக்ஷத்தை அப்யுபகமம் பண்ணி தூஷித்தார்.

இனி, நிர்விஷயமான அஹமர்த்தம் என்பதே கிடையாது என்று ஸ்வபக்ஷத்தைச் சொல்லுகிறார்.

इदानीं अहमर्थस्य निर्विषयत्वं असिद्धं इत्याह (स्वमात्रेति)

[இது சண்டமாருதத்தில் (வ்யாக்யானத்தில்) கூறப் பட்டுள்ள அவதாரிகை.]

அஹமர்த்தமானது "அஹம்" "அஹம்" என்று ஸ்வமாத்ரப்ரகாசமானாலும் நாங்கள் அஹமர்த்த ஸ்வ ரூபத்தை ப்ரத்யக்த்வ - ஆநந்தத்வ - அநுகூலத்வ-

விசிஷ்டமாகவே ப்ரகாசிப்பதாக ஒப்புக்கொண்டுள்ள தால்-தர்மிபாஸ்யமாகவே ப்ரத்யக்த்வாதிகளைச் சொல்வ தால் நிர்விஷயமான அஹமர்த்தம் ஒருபோதும் கிடை யாது. [ஸ்ரீபாஷ்யத்தில் ஜிஜ்ஞாஸாதிகரணத்தில்,

"स्वापमदमूर्च्छासु च सविशेष एव अनुभवः इति स्वावसरे निपुणतरमुपपादयिष्यामः" என்றும், "एवं हि सुप्तोत्थितस्य परामर्शः 'सुखमहमस्वाप्सं' इत्यनेन प्रत्यवमर्शेन तदानीमेव अहमर्थस्यैव आत्मनः सुखित्वं ज्ञातृत्वं च ज्ञायते

என்றுள்ள ஸ்ரீஸூக்திகளை இவ்விடத்தில் அநுஸந்திக் கவும். இதனால், ஸ்வாபதசையிலும் ஸவிஷய அநு பவமே உள்ளது என்று தமது ஸித்தாந்தத்தைக் கூறினார்.

மறுபடியும் ப்ரதிபக்ஷி கூறுகிறான்—'நாங்கள் ஸம்வித்தை எப்படிப்பட்டதாகக் கூறுகிறோமோ அப்படிப்பட்டதான ஸம்வித்தை—தர்மபூதஜ்ஞாநத்தை ஸ்வாபதசையில் நீங்கள் ஒப்புக்கொண்டிருக் கிறீர்களே!' என்று. இந்த ஆக்ஷேபத்திற்குப் பதில் கூறுகிறார் यद्यपीति. "ஸ்வாபதசையில் தர்மபூதஜ்ஞாநம் (இந்த்ரியப்ரஸரணமில்லாததால்) நிர்விஷயமே. ஆகிலும் ஸாச்ரயத்வ-நித்யத்வாதி தர்மங்களையுடை யதே. ஸ்வாபதசையிலும் நிர்தர்மகமன்று" என்று அருளிச்செய்தார்.

ஆக இவைகளால், "அஹமர்த்தமானது நிர் விஷயம் அன்று; ப்ரத்யக்த்வாதி விஷய விசிஷ்டமே" என்று ஸுஸ்பஷ்டமாக ஸாதித்துள்ளார். இதனால் ப்ரத் யக்த்வாதிகளுக்கு தர்மிபாஸ்யத்வம் ஒப்புக்கொண் டாராயிற்று.

ரக்ஷாக்ரந்தகாரர் சததூஷணீபங்க்திகளை அநு வதிக்கும்போது "नापि द्वितीयः" என்ற ஆரம்ப பங்க்தி

யை விட்டிட்டார். ஏன்? எடுத்துக் கழிக்கும் ஸ்ரீஸூக்திகளைத் தாம் கூறியதாகப் பிறர் நினைக்கக் கூடாது, ஸித்தாந்தம் கூறும் இடத்திலுள்ள பங்க்திகள் போல் ப்ரமிக்க வேண்டும் என்பதற்காகவே அவ்விதம் எழுதப்பட்டுள்ளது.

"நிர்விஷயமான ஸம்வித் கிடையாது என்றதால் அதைக்காட்டிலும் விலக்ஷணமான அஹமர்த்தமானது நிர்விஷயமே" என்று ஸாதிக்கிறார். இங்குள்ள விலக்ஷண சப்தத்திற்கு அதிரிக்தம் என்று அர்த்தம் கொள்ள வேண்டும். "अहमर्थातिरिक्ता संवित्" என்று சண்டமாருதத்தில்—வ்யாக்யானத்தில் காணலாம். மேலும், 'அஹமர்த்த-விலக்ஷண:' என்பதற்கு, அஹமர்த்தம் நிர்விஷயமே என்றால், கடைசியில் क्वचित्तदपि निर्विशेषः प्रकाशानभ्युपगमात् என்று அருளிச்செய்ததோடு விரோதிக்கும். அங்குள்ள விசேஷ சப்தத்திற்கு 'தர்ம' பரமாகவன்றோ அர்த்தம் சொல்ல வேண்டும்? 'விஷய' பரமாகப் பொருள் கொள்ளக்கூடாது என்பதும் உசிதமில்லை,

इदानीं अहमर्थस्य निर्विषयत्वमसिद्धं इत्याह - स्वमात्रेति ।

என்று அங்குள்ள பங்திக்கு அவதாரிகை இட்டுள்ளதை வ்யாக்யானத்தில் காணலாம், மேலும், விசேஷ பதத்திற்கு, தர்மபரமாக அர்த்தம் கொண்டால் यद्यपि என்று ஆரம்பிப்பதற்குக் காரணமென்ன?

ஸ்வாமியின் அந்தராத்மா உண்மையாகவே இதற்கு ஸாக்ஷியாக இருந்தால் ஸந்தோஷம். ஸ்வாமியின் விவரணத்தை மற்றப் பண்டிதர்கள் ஒருபோதும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

இனி, ப்ரத்யக்த்வாதிகள் தர்மிபாஸ்யங்கள் என்று அருளிச்செய்துள்ள ஆசார்ய ஸ்ரீஸூக்திகளை

யும் பின்புள்ளார்களின் ஸித்தாந்த ஸூக்திகளையும் விவரமாகக் கூறுகிறோம்.

1. ஸ்ரீபாஷ்யகாரர் ஜிஜ்ஞாஸாதிகரணத்தில் (உத்தமூர் ஸ்வாமி பதிப்பு, 116-ஆம் பக்கம்)—

सविशेषविषयत्वात् सर्वप्रमाणानां. . .स्वापमदमूर्च्छासु च **सविशेष एव अनुभवः** इति स्वावसरे निपुणतरमुपपादयिष्यामः

என்று அருளிச்செய்துள்ளார்.

2. இதற்கு வ்யாக்யானம் செய்தருளிய ச்ருத ப்ரகாசிகாசார்யர்—

स्वापेति—अनुभवः - आत्मस्फुरणम् । न हि तदा धर्मभूतज्ञान-स्फुरणम् । स्वावसरे - अहमर्थस्यैव आत्मत्वसमर्थने । निपुणतरं परप्रयुक्तयुक्त्यैवेति भावः । यद्वा, निपुणतरं-विशदतरम् । एत-दुक्तं भवति – किं त्वया स्वानुभवाधीनं निर्विशेषत्वं कर्मकर्त्र-वच्छिन्नस्य ज्ञानस्य उच्यते, उत, अहमिति भासमानस्य आत्म-स्वरूपभूतज्ञानस्य, उत, तदुत्तीर्णस्य वा । आद्ये, कर्मकर्त्रवच्छेद-नियमादेव न निर्विशेषत्वम् । **द्वितीये, प्रत्यक्त्व - अनुकूलत्वा-दिभिः सविशेष्यत्वं अवर्जनीयमिति वक्ष्यते** । तृतीये, शून्यत्वादेव न निर्विशेषत्वं साध्यमिति ।

என்று அருளிச்செய்தார்.

3. ஜிஜ்ஞாஸாதிகரணத்தில் வேறோர் இடத்தில் (167-ஆம் பக்கத்தில்)—

एवं हि सुप्तोत्थितस्य परामर्शः सुखमहमस्वाप्सं इत्यनेन प्रत्यवमर्शेन तदानीमपि **अहमर्थस्यैव आत्मनः सुखित्वं ज्ञातृत्वं** च ज्ञायते ।

என்று உள்ளதைக் கவனிக்கவும்.

4. இதற்கு வ்யாக்யானம் செய்தருளிய ச்ருத ப்ரகாசிகாசார்யர்—

सुखमहमस्वाप्समिति परामर्शे सुखमित्यनेन तदानीं अनुकूलतया भान (समानत्व) मनुसंहितं भवति। अहमित्यनेन स्वस्मै भासमानत्वरूपप्रत्यक्त्वं च अनुसंहितं भवति।....स्वस्मै स्वयं अनुकूलमित्यानुकूल्यप्रतियोगित्वाभिप्रायेण सुखित्वं इत्युक्तम्; स्वस्मै भासत इति भासमानप्रतिसम्बन्धित्वरूपप्रत्यक्त्वाभिप्रायेण ज्ञातृत्वं इत्युक्तम्। न तु धर्मभूतज्ञानस्फुरणात्। ...तस्मात् तदानीमात्मा प्रत्यक्त्वेन अनुकूलत्वेन अनुसंहितः इति परामर्शफलितार्थः।

என்று அருளிச்செய்துள்ளார்.

5. ஜிஜ்ஞாஸாதிகரணத்தில் 'மற்ருேர் இடத்தில் நிர்விசேஷஜ்ஞாநவாதத்தில்—

ननु स्वापदशास्वपि सविशेषो अनुभवः अस्तीति पूर्वमुक्तम्। सत्यमुक्तम्। स त्वात्मानुभवः। स च सविशेष एवेति स्थापयिष्यते।

என்று அருளிச்செய்துள்ளார்கள்.

6. ச்ருதப்ரகாசிகையில் மற்ருேர் இடத்தில் (154-ஆம் பக்கத்தில்)—

अहमर्थः प्रत्यक्त्वेन, अनुकूलत्वेन, एकत्वेन च स्वतो भाति। न ह्यर्थान्तरं अहमर्थो विषयीकर्तुमलम्।

என்று அருளிச்செய்துள்ளார்.

7. ஸ்ரீஸ்வாமி தேசிகனுக்கும் தேசிகனை (ஆசார் யரான) வாதிஹம்ஸாம்புவாஹாசார்யர் - அப்புள்ளார்.

ந்யாயகுலிசத்தில், "மஸ்ருணாநுகூல்யம் தர்மிபாஸ்யம்" என்றும், "தீவ்ராநுகூல்யம் தர்மபூதஜ்ஞாநத்திற்கு விஷயமாய்க் கொண்டு ப்ரகாசிக்கிறது" என்றும் விசதமாக ஸாதித்திருப்பதைக் கீழே நிரூபித்துள்ளோம்.

8. இனி, ஸ்வாமி தேசிகன் ஸ்ரீஸூக்திகளை எழுதுகிறோம். விரோதபரிஹாரத்தில் 'ஆநுகூல்யப்ரகாச ப்ரகாரம்' என்னும் ப்ரகரணத்தில் "மந்தமான ஆநுகூல்யம் நிர்விகாரஸ்வரூப ப்ரகாசத்தாலே எப்போதும் தோற்றி, தீவ்ரமான அநுகூலத்வம் அநாதிகாலகர்ம மூலபகவத் ஸங்கல்ப விசேஷத்தாலே திரோஹிதமாய், பின்பு யோகாதி தசைகளிலே தர்மபூதஜ்ஞாநத்தாலே அநுபாவ்யமாகிறது" என்று அருளினார்.

9. தத்வமுக்தாகலாபத்தில் ஜீவஸரத்தில் "प्रत्यक्त्वं पुंसि केचित् (7-ஆவது ச்லோகம்) என்கிற ச்லோகத்தின் அலப்யலாபவ்யாக்யானத்தில்—

"अत्र एकत्वादीनां धर्मिभास्यत्वमिति दशोपनिषद्-भाष्यकारपक्षः । धर्मभास्यत्वमिनि साक्षात्स्वामीति विख्यातानां पक्षः इति पक्षभेदो वर्णितो लक्ष्यते । शोधने पूर्वश्लोके स्वस्यैव आत्मा तु इत्यत्र स्वस्येतिपदेन धर्मविशिष्टधर्मि-ग्रहणात् विशेषणं विशेष्यं च धर्मिभास्यमिति स्पष्टम् ।" என்று அபிநவதேசிகர் அருளிச் செய்துள்ளார்.

10. தத்வமுக்தாகலாபத்தில் புத்திஸரத்தில் (7-ஆம் ச்லோகம்) बुद्धिर्द्रव्यं विकारान्वयतः என்கிற ச்லோகத்தில் बोद्धृवच्चाजडत्वात् என்பதற்கு வ்யாக்யானம் செய்தருளும்போது ஸர்வார்த்தஸித்தியில்—

अजडत्वहेतुना बुद्धेर्द्रव्यत्वं साध्यते । तत्र अजडत्वहेतोः अद्रव्ये प्रत्यक्त्वादौ सत्त्वेन व्यभिचारात् विरोधः स्फुट एव । என்று அருளினார்.

11. புத்திஸரத்தில் इदन्त्वात्यन्तशून्ये (32 ச்லோ) என்ற ச்லோகத்தில் உத்தரார்த்தத்தில் உள்ள "धीत्वादेवां विशिष्टं प्रथयति" என்பதற்கு வ்யாக்யானம் செய்தருளும்போது ஸர்வார்த்தஸித்தியில்—

आत्मस्वरूपप्रत्ययश्च अहंत्वादिविशिष्टप्रकाशात्मेत्यङ्गीचक्रुः ।

என்று அருளிச்செய்துள்ளார்.

12 ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் ஜீவபரிச்சேதத்தில், என்று அருளிச்செய்துள்ளார்.

अहमिति प्रत्यक्त्व - एकत्वविशिष्टतया तु स्वप्रकाशता सर्वदा । योगदशायां तु यथावस्थितापूर्वाकारविशिष्टतया यौगिकप्रत्यक्षेण साक्षात्क्रियते ।

13 ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் புத்தி பரிச்சேதத்தில் பன்னிரண்டு கேள்விகளும் அதற்குப்பதிலும் சொல்லும் ப்ரகரணத்தில்—

यत्तु भाष्ये "एवं हि सुप्तोत्थितस्य परामर्शः सुखमहमस्वाप्समिति । अनेन प्रत्यवमर्शेन तदानीमेवाहमर्थस्यैवात्मनः सुखित्वं ज्ञातृत्वं च ज्ञायते" इत्युक्तम् । तत् स्वरूपानुकूल्यविवक्षया प्रत्यक्त्वविवक्षया चेति न विरोधः । என்று அருளினார். स्वरूपानुकूल्येति - अनुकूलत्वमेव सुखित्वं । प्रत्यक्त्वमेव ज्ञातृत्वमिति भावः । என்று உபநிஷத்பாஷ்யகாரர் வ்யாக்யானம் பண்ணினார். ரத்னபேடிகையில்—

स्वरूपनिष्ठं यदानुकूल्यं तदेव सुखित्वमित्यनेन विवक्षितम् । प्रत्यक्त्वमेव ज्ञातृत्वमित्यनेन विवक्षितमित्यर्थः ।

என்று அருளிச்செய்திருப்பதையும் காணலாம்.

14. உபநிஷத் பாஷ்யகாரர் "अहमिति प्रत्यक्त्व-एकत्वविशिष्टतया" என்ற பங்க்திக்கு வ்யாக்யானம் செய்தருளும் போது—

प्रत्यक्त्व - एकत्वादिकं स्वरूपातिरिक्तधर्मान्तरमेव । न च तद्विषयकत्वे विषयित्वप्रसङ्गः इति वाच्यम् । स्वापृथक्-सिद्धधर्मव्यतिरिक्तविषयकत्वं नास्तीत्यत्र तात्पर्याभावात् विष-यित्वाभावप्रवादस्य । वक्ष्यति च आत्मस्वरूपज्ञानस्य प्रमाणत्वम् अतो न काचिदनुपपत्तिः" इति । என்றார்.

15. பாவப்ரகாசிகையில் உபநிஷத் பாஷ்யகாரர்-

"प्रत्यक्त्व-अनुकूलत्व एकत्वभिन्न–आत्मधर्मग्रहे आत्मनः सामर्थ्याभावात्"

என்று அருளிச்செய்தார். இதனால், ப்ரத்யக்த்வாதிகளை க்ரஹிப்பதில் ஆத்மாவிற்கு ஸாமர்த்யம் இருப்பதாகத் தேறுகிறதல்லவா?

16. ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹத்தில்—

....प्रत्यक्त्व-एकत्वादिविशिष्टतयैव धर्मिस्फुरणेन स्व-प्रकाशत्वोक्तेस्सम्भवात् ।

என்று ஆரம்பித்து, தர்மிபாஸ்யத்வ பக்ஷத்தைப் பல ப்ரமாணங்களைக் கொண்டு ஸ்தாபித்து, ஸ்வயம்ப்ரகாசத்வ·பக்ஷத்தைக் கண்டித்து, கடைசியில்—

श्रीभाष्य-श्रुतप्रकाशिकाविरोधात् बहुतर-आचार्यसूक्ति-विरोधात्, उक्तानुपपत्तिपरिहाराभावाच्च तदन्यदीयमेवेति मन्यामहे इत्यलं विस्तरेण ।

என்று அருளிச்செய்துள்ளதைப் பலகாலும் ஸேவிக்க வேணும்.

17. மஹாமஹோபாத்யாய, பண்டிதரத்ந, மைஸூர் ஆஸ்தான தர்மாதிகாரி லக்ஷ்மீபுரம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி அருளிச்செய்த 'தர்சநோதயம்' என்கிற க்ரந்தத்தில் சேதநத்வத்தை நிரூபணம் பண்ணும் ப்ரகரணத்தில் (220-ஆம் பக்கத்தில்)—

स हि स्वयं स्वात्मानमेव स्वस्मा एव प्रकाशयति । एवं प्रकाशमानत्वमेव अहंत्वलक्षणं प्रत्यक्त्वम् । अहमिति प्रकाशदशायां अनुकूलत्वमपि सर्वदा स्वस्मिन् भासते । न कदाचिदपि प्रतिकूलत्वमिति सुखरूपत्वम् । . . .एवं एकत्वमपि सदा भासते। **ततश्च प्रत्यक्त्व, एकत्व, अनुकूलत्वानि, आत्मस्वरूपान्तर्गतानि, धर्मिभास्यानीति निर्णयः ।**

என்று ஸுஸ்பஷ்டமாக அருளிச்செய்துள்ளதையும் காணலாம்.

18. கரூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி என்று ஸுப்ரஸித்தராய் எழுந்தருளியிருந்த மஹாவித்வான் ஸ்ரீசைல மஹாதேசிகன் அருளிச்செய்த யதீந்த்ர ஸித்தாந்த ஸங்க்ரஹத்தில் அஜடத்ரவ்ய நிரூபணாவஸரத்தில், 16-ஆம் பக்கத்தில்-

अजडद्रव्यतत्वं तु चतुर्धा प्रविभज्यते ।
जीवेशधर्मधीनित्यविभूतीनां प्रभेदतः ॥
अणुचेतनता जीवलक्षणं श्रुतिसम्मतम् ।
ईशव्यावृत्तये प्रोक्तमणुत्वं जीवलक्षणे ॥
प्रत्यक्त्वादिविशिष्टस्य स्वप्रकाशत्वमिष्यते ।
अहमित्येव सततं स्वरूपं स्फुरति स्वयम् ॥
स्वापेऽप्यहमिति स्फूर्तिराप्रबोधाच्च भाषिता ।
अहंत्वमेव प्रत्यक्त्वं प्रकारस्तत्र भासते ॥

अन्यथा निर्विशेषस्वप्रकाशस्स्यात् कुदृष्टिवत् ॥
श्रीतत्त्वटीका-सर्वार्थसिद्ध्यादौ विश्रुतं च तत् ।
स्वप्रकाशान्तरं कैश्चित् प्रत्यक्त्वादिकमीरितम् ॥
उपेक्ष्यमेतन्निपुणैः दूषणैराविलं यतः ॥

"புத்திமான்கள் ஸ்வயம்ப்ரகாசத்வ பக்ஷத்தை உபேக்ஷிக்க வேண்டும்" என்று அருளிச்செய்துள்ளார்.

19. தொட்டையாசார்யர் சிஷ்யரான ஸ்ரீநிவாஸ தாஸர் அருளிச்செய்த 'யதீந்த்ரமத தீபிகை' என்னும் க்ரந்தத்திற்கு வித்வான் ஸ்ரீ வீ. கே. ராமானுஜாசார்யர் ஸ்வாமி தமிழில் வ்யாக்யானம் செய்தருளியிருக்கிறார். அதன் முகவுரையில், "இது உப. வே. சின்னமு ஸ்ரீநிவாஸ பாட்ராசார்ய ஸ்வாமியுடன் சேர்ந்து எழுதப் பட்டது. ஒப்பிலியப்பன் ஸந்நிதி வித்வான் உப. வே. நவநீதம் கிருஷ்ணமாசார்ய ஸ்வாமியும், திருக்குடந்தை அபிநவபட்ட பாண, சப்ததர்க்காலங்கார வித்யா பூஷண, பண்டிதராஜ, மஹாமஹோபாத்யாய என்னும் பிருதங்களுள்ள ராயம்பேட்டை கிருஷ்ணமாசார்ய ஸ்வாமியும் மூலக்ரந்தங்களை வைத்துக்கொண்டு இதைப் பரிசோதித்திருக்கிறார்கள். ஆகையால் எல்லாப் பெரி யோர்களும் ஒப்புக்கொள்வார்கள் என்னும் நம்பிக்கை யாலே இது அச்சிடப்பட்டது" என்று கூறியுள்ளார். முனித்ரய ஸம்ப்ரதாயத்திலே மஹாவித்வான்களாய் எழுந்தருளியிருந்து நமது ஸித்தாந்த க்ரந்தங்களை ப்ர வசனம் பண்ணிக்கொண்டிருந்த இந்த மஹான்களால் அக்ஷரசः சோதிக்கப்பட்டு ஸ்ரீ வீ. கே. ராமானுஜாசார்ய ஸ்வாமியால் எழுதப்பட்டுள்ள வ்யாக்யானத்தில் ஜீவ நிருபணத்தில் 299-ஆம் பக்கத்தில் (7) **ஜீவன் தன்னைக் காட்டும்போது தன்னை ப்ரத்யக் என்றும், ஒன்று என்றும், ஸுகம் என்றும் தனக்குக் காட்டுகிறான்.** ஸுகமாக இருப்பவன் என்று அறிவதற்கு ப்ரமாணம் 'ஸுகமஹமஸ்வாப்ஸம்' [நான் தூங்கினேன். அப்போது என் ஸ்வரூபம் ஸுகமாகத்

தோன்றிற்று என்பது இதன் பொருள்] என்று தர்மி பாஸ்யமாகவே எழுதியுள்ளார். ஸ்வயம்ப்ரகாசமாக எழுதவில்லை.

20. ஸாரப்ரகாசிகையில்—

स्वसंयुक्तप्रकाशकत्वं विषयित्वमित्यर्थः । स्वगत-एकत्व-अनुकूलत्व - प्रत्यक्त्वप्रकाशभूते धर्मिणि अतिव्याप्तिपरिहारार्थं स्वसंयुक्तपदम् ।

என்று வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த அர்த்தம் யுக்தமானது என்று அருளிச்செய்கிறார் ஸாரபோதிநீகாரர்—

युक्त चैतत्, विषयित्वशब्दार्थस्य सम्यक् पर्यालोचनायां तदर्थलाभात् । विषयो नाम विषयितावान् । विषयिता च सिद्धान्ते संयोगादिरूपा । तथा च भाष्यम्– "सम्बन्धस्तु संयोग-लक्षणः" इति । न्यायसिद्धाञ्जने च बुद्धिपरिच्छेदे संयोगार्ह-वस्तुनि वर्तमानत्वादिविशिष्टद्रव्यप्रकाशनं संयोगः इति प्रकाशनं विषयत्वम् । तथा च संयोगवान् । அதாவது விஷய இத்யர்த்தः । तद्वत् ज्ञानं विषयि । तस्य भावः विषयित्वम् । तथा च संयुक्तप्रकाशकत्वं विषयित्वम्" इति सारप्रकाशिको-क्तार्थ एव पर्यवसितः ।

மேலே கூறிய ப்ரமாணங்களின் அர்த்தங்கள் ஸுலபமாகத் தெரிந்துகொள்ளக் கூடியவைதாம். தெரியாவிட்டால் அவைகளின் வ்யாக்யானங்களைக் கொண்டு அறியலாம். ராமானுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம், ஸ்ரீஸாரபோதிநீ இவைகளைக் கொண்டும் தெரிந்து கொள்ளலாம்.

இதுவரையில் ஸ்ரீஸாரபோதிநீ ஸம்ப்ரதாயமானது சொல்லப்பட்டது. அதாவது ஸ்ரீபாஷ்யகாரர், ச்ருதப்ரகாசிகாசார்யர், ஸ்ரீஸ்வாமி தேசிகனுக்கும் தேசிகரை அப்புள்ளார், ஸ்ரீஸ்வாமி தேசிகன், உபநிஷத்பாஷ்யகாரர், ஸ்ரீந்ருஸிம்ஹராஜாசார்யர், ஸ்ரீராமானுஜ ஸித்

தாந்தஸங்க்ரஹகர்த்தா, கரூர் ஸ்வாமி, மஹாமஹோ பாதயாய லக்ஷ்மீபுரம் ஸ்வாமி போன்ற மஹான்கள் ஸ்ரீஸாரபோதிநீ ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்கள். அதாவது ஸாரபோதிநீ ஸித்தாந்தத்திற்கு மூல புருஷர்கள்.

முக்கியமாக, உபநிஷத் பாஷ்யகாரர் ந்யாயஸித் தாஜ்ஞன வ்யாக்யானத்தில் அருளிச்செய்ததைப் பின் பற்றியே ஸ்ரீஸாரபோதிநியில் ப்ரத்யக்த்வாதிகளுக்கு தர்மிபாஸ்யத்வத்தை அருளிச்செய்துள்ளார். இந்த ஸித்தாந்தம் உபநிஷத் பாஷ்யகாரர் ஸித்தாந்தமே ஆகும். இதை தூஷிப்பதால் உபநிஷத்பாஷ்யகாரர் ஸித்தாந்தத்தையே தூஷித்ததாகும். தர்மிபாஸ்யத் வத்தை ஒப்புக்கொள்ளாவிட்டால் உபநிஷத்பாஷ்ய காரர் பக்ஷத்தைக் கண்டித்ததாகும். தர்மபாஸ்யத் வத்தை ஒப்புக்கொள்ளாவிட்டால் ஸ்ரீஸாராஸ்வாதிநீ காரர் பக்ஷத்தைக் கண்டித்ததாகும். அல்லது ஸ்வயம் ப்ரகாசத்வத்தை ஒப்புக்கொண்டால் மேலே கூறிய ஆசார்ய ச்ரேஷ்டர்களான பாஷ்யகாரர் முதலானவர் களின் ஸித்தாந்தத்தைக கண்டித்ததாகும். ஆகையால் ஓராண் ஒருவழியாக—ஸம்ப்ரதாயமாக வரும் ஸித்தாந் தார்த்தத்தை அங்கீகரிப்பதுதான் உசிதமாகும்.

இந்த க்ரந்தத்திற்கு 'உபநிஷத்பாஷ்யகாரர் ஸித்தாநதம்' என்று பெயரிடலாம் என்று யோசித் தோம். ஆயினும், முன்பெல்லாம் இந்த ஸ்வாமி, உப நிஷத்பாஷ்யத்திலோ, பாவப்ரகாசிகையிலோ அச்சுப் பிழையை இதரர் சொன்னாலும் கூர்வேல்கொடுந் தொழிலராக மாறிவிடுவர். அதே ஸ்வாமி இப்பொழுது ஸ்வாமி தேசிகனுக்கு அவஸ்தாபேதத்தைக் கல்பிப்பவர் போல், "உபநிஷத்பாஷ்யகாரரும் மேலே பல இடங் களில் தர்மிபாஸ்யத்வ பக்ஷத்தைக் கண்டித்திருக் கிறார்" என்று எழுதி, அவருக்கு மதிபேதத்தைக் கல்பிக்கிறார்.

[ஸ்ரீஸந்நிதி ஸம்ப்ரதாய நிர்வஹண நிஷ்ணாதரான ஸ்ரீமதழகியசிங்கர் ஆதரித்துள்ள காரணத்தினாலேயே

ஸவமூலபூதரான உபநிஷத்பாஷ்யகாரருடைய பக்ஷத்தையும் காற்கடை கொள்ளும் இந்த மஹானுக்கு ஸ்ரீஸந்நிதி ஸம்ப்ரதாயத்தில் எவ்வளவு ப்ரத்வேஷம் உள்ளது என்பதைத் தடஸ்தர்களான ப்ராமாணிகர்கள் அறியலாம்.] ஆகையாலேயிறே 'பாஷ்யகாரர் முதலாக ஓராண் ஒருவழியாக வந்த ஸம்ப்ரதாயம்' என்பதைக் காட்டுவதற்காகவே "ஸ்ரீஸாரபோதிநீ ஸம்ப்ரதாயம்" என்று தலையங்கமிட்டோம்.

ஸ்ரீராமானுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹகாரர், ப்ரத்யக்த்வாதிகளுக்கு ஸ்வயம்ப்ரகாசத்வத்தைப் பல க்ரந்தங்களை ப்ரமாணமாகக் காட்டிக் கண்டித்து, "இத்யலம் அதிவிஸ்தரேண" என்று முடித்திருக்கிறார். அவ்விதம் இருக்கச்செய்தேயும், "ஸங்க்ரஹகர்த்தாவின் நிருபணம் ஸ்ரீஸாராஸ்வாதிநீ ஸித்தாந்தத்தையே த்ருடீகரணம் செய்கிறது" என்று எழுதியிருப்பதைப் பார்த்து விலவறச் சிரித்திட்டோம். ஏனெனில், இந்த ஸ்வாமி, 'தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தில் கூறிய ஸித்தாந்தங்கள் எல்லாம் தேசிக ஸித்தாந்தத்தை அநுஸரித்தவையே' என்று பல காலம் எழுதிப் பழகிவிட்டாரன்றோ?' தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்கள் 'ப்ரபத்தி அநுபாயம்' என்று சொன்னால், "ஆமாம், தேசிகன் ஸித்தாந்தமும் அதுவேதான். அதாவது அநு-சாஸ்த்ரத்தை அநுஸரித்து, உபாயம் — உபாயமாகிறது. ஸ்வாமி தேசிகன் ஸாத்யோபாய சோதநாதிகாரத்தில் பல ப்ரமாணங்களால் ஸாதித்துள்ளதை அன்றோ இவர்கள கூறுகிறார்கள்? இவ்விதம் இல்லாவிட்டால் ப்ரபத்தி உபாயமாகமாட்டாது. ப்ரபத்தி உபாயமில்லை என்று அல்லவோ சொல்லியிருப்பார்கள்? அநுபாயம் என்றதால் நாம் சொன்ன அர்த்தம்தான கொள்ளவேண்டும்" என்பர்.

"பிராட்டிக்கு உபாயத்வமில்லை" என்று அவர்கள் சொன்னால், "நாங்களும் அதைத்தான் சொல்லுகிறோம். 'लक्ष्म्या सह हृषीकेशः रक्षकः' என்றல்லவோ ஸ்வாமி தேசிகன் ப்ரமாணமாகக் காட்டுகிறார். லக்ஷ்மீ விசிஷ்டனான நாராயணனே—மிதுனமே உத்தேச்யம்—உபாயம்

என்றல்லவோ நாங்கள் சொல்லுவது. கேவலம் பிராட்டிக்கு மட்டும் உபாயத்வததை நாங்கள் சொல்லவில்லையே. பிராட்டிக்கு உபாயத்வம் இல்லை என்று சொல்லுவதும எங்களுடைய ஸித்தாந்ததைச் சேர்ந்ததேயாகும்'' என்கிற ரீதியில் பல க்ரந்தங்களை எழுதி வெளியிட்டாற் போல், ராமானுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹ காரரும் ஸாராஸ்வாதிநீ பக்ஷத்தை த்ருடீகரிக்கிறார் என்று எழுதப்பட்டதாகும்.

நிகமனம்

காலப்போக்கில் நாம் எல்லோரும் ஒன்றாக இருந்து ஸ்ரீதேசிக ஸமப்ரதாயத்தையும் ஸ்ரீபாஷ்யகாரர் ஸித்தாந்தத்தையும் வளர்க்க வேண்டியிருக்க, இருபத்தேழு வருஷங்கள் கழித்து, ஸ்ரீஸாரபோதினியைக் கண்டித்து ஸ்ரீஸந்நிதி ஸம்ப்ரதாயஸ்தாருக்கும் முனித்ரய ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கும் இவ் விஷயத்தில் அபிப்ராய பேதம் இருப்பது போல் பாமரர் ப்ரமிக்கும்படி எழுதியிருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

முனித்ரய ஸம்ப்ரதாயத்திற்கு உபநிஷத்பாஷ்ய காரரும் ஸ்ரீஸாராஸ்வாதிநீகாரரும் இரண்டு கண் போன்றவர்கள். அவர்களில் ஒருவருடைய ஸித்தாந்தத்தை ஏற்றுக்கொள்வதற்காக மற்றவருடைய ஸித்தாந்தத்தைக் கண்டிப்பது உசிதமாகாது. சதுச் சாஸ்த்ரவேத்தாவும் ரத்நபேடிகாகாரருமான ஸ்ரீ திருப்புட்குழி ஸ்வாமியும், அலப்யலாப வ்யாக்யானத்தைச் செய்தருளிய அபிநவதேசிகரும் இரண்டு பக்ஷத்தையும் அங்கீகரித்தே வ்யாக்யானம் செய்தருளியிருப்பதைக் காணலாம். அவர்கள் சில பரிஷ்காரங்களைச் செய்தும் யுக்திவாதங்களைப் பண்ணியும் ஸ்வயம்ப்ரகாசத்வத்தை ஸ்தாபித்துள்ளார்கள். ஆகிலும் தர்மிபாஸ்யத்வ பக்ஷத்தைக் கண்டிக்கவில்லை. மேலும், க்ரந்தங்களுக்கு வ்யாக்யானம் செய்தருளும ஸமயத்தில் ப்ரஸக்தாநுப்ரஸக்தியாக அவ்விதம் எழுதியுள்ளார்கள்.

ஒரு க்ரந்ததை தூஷிக்க வேண்டும் என்பதற்காகவே தனியாக ஒருவரும் ஒன்றும் எழுதவில்லை. யாருடைய த்ருப்த்யர்த்தம் இருபத்தேழு வருஷங்கள்

கழித்து இந்த க்ரந்தம் எழுதப்பட்டதோ? ஸ்ரீ ஸாக்ஷாத் ஸ்வாமிகள் (ஸ்ரீரங்கநாதனும், ஸ்ரீஸாராஸ்வாதிநீக்ரந்த கர்த்தாவும்) ஒருபோதும் ஸந்தோஷமடைய மாட்டார்கள். வஞ்சநோக்திகள் அன்றோ இதில் பூர்ண மாக உள்ளன? 'பிபேத்யல்பச்ருதாத் வேத:' என்கிற வசனத்தில் 'பஹுச்ருதாகபி' என்பதையும் இனிச் சேர்த்துக்கொள்ள வேண்டும் போலும்.

ரக்ஷா க்ரந்தத்தைப் படித்து நாங்கள் எங்கள் ஸித்தாந்தத்தை ஒருபோதும் மாற்றிக்கொள்ளப்போவ தில்லை. ஸ்ரீஸ்வாமியினுடைய சிஷ்யர்கள் தாம் வஞ்சிக் கப்பட்டுள்ளார்கள். ப்ரத்யக்ஷவாதிகள் ஸ்வயம்ப்ர காசங்களா தர்மிபாஸ்யங்களா? என்பதைத் தெரிந்து கொள்ளாவிட்டால் தலைபோவது ஒன்றுமில்லை. இதனால் மோக்ஷம் கிடைப்பதும் நின்றுவிடாது. ஸ்ரீஸாராஸ்வாதிநீகாரரே இப்படியும் சொல்லலாம் என்கிற ரீதியில்தான் எழுதியுள்ளார். எதுவாயினும் இந்தக் காலத்தில் இவ்வித விசாரங்கள் பயனற்றவை. இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு வாக்யார்த்தம் சொல்வதில் குசலர்களும் குதூகலிகளும் இருந்தார்கள். ப்ரயோஜனமற்ற ரக்ஷா க்ரந்தத்தை எழுதியதை விட்டு, உபயோகமுள்ள க்ரந்தம் எதையாவது எழுதியிருக் கலாம்.

இந்த ஸ்வாமி ஸ்வயம்ப்ரகாசத்வ பக்ஷத்திற்கு ப்ரமாணமாகக் காட்டியவை எல்லாம் எடுத்து இந்த க்ரந்தத்தில் விவரமாகப் பதில் எழுதப்பெற்றது. இரண்டாவது பாகத்திலுள்ள இரண்டொரு விஷயங் களுக்கு மட்டும் ஸ்தாலீபுலாகந்யாயேந பதில் எழுதப் பெற்றுள்ளது. முக்கியமாக ஸாரபோதிநீ ஸம்ப்ர தாயத்தை விசதமாக விளக்கியுள்ளோம். இத்துடன் இந்த விவாதம் முற்றுப்பெறும் என்று நம்புகிறோம். இனி விவாதத்தை வளர்க்க வேண்டாம் என்று அநந்த ப்ரணாம பூர்வகம் ஸவிநயம் பிரார்த்திக்கிறோம்.

सम्प्रदायप्रकाशोऽयं सम्यक् साधुमुदे कृतः ।
एनं संवीक्ष्य तुष्यन्तु सन्तस्सद्गुणभूषणाः ॥

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

इत्थम्
ஸ்ரீமத் அழகியசிங்கர்
छात्रश्रेणीमुख्याः

இந்தப் புத்தகம் கிடைக்கும் இடம் :

ஸ்ரீ C. கோவிந்தாசாரியர்
66, டாக்டர் ரங்காசாரி ரோடு
அபிராமபுரம்
சென்னை-18

Elango Achukoodam, 166, R. H. Road, Madras-4.